*அத்தியாயம் 5*

# வெளிநாட்டுத்துறை அபிவிருத்தி மற்றும் கொள்கைகள்


## 5.1 பொதுநோக்கு

அதிகரித்த உலகளாவிய பொருளாதார வளர்ச்சி, மற்றும் பன்னாட்டு வர்த்தகத்தில் ஏற்பட்ட விரிவாக்கம் என்பனவற்றின் முக்கிய நன்மைகள் காரணமாக 2004 இல் இலங்கையின் வெளிநாட்டுத்துறை சிறந்த செயலாற்றத்தினைப் பதிவு செய்தது. எனினும், எதிர்பார்க்கப்படாத வெளியக திடீர் மாற்றங்களினால் நாட்டுக்கு ஏற்பட்ட ஒருசில அறைகூவல்களையும் நாடு எதிர்நோக்க வேண்டியிருந்தது. இறக்குமதி, ஏற்றுமதி இரண்டிலும் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக வெளிநாட்டு வர்த்தகம் குறிப்பிடத்தக்களவிற்கு விரிவடைந்தது. ஐ.அ.டொலர் நியதிகளில் ஏற்றுமதி வருவாய்கள் 12 சதவீதத்தினால் அதிகரித்தமையானது அளவில் ஏற்பட்ட 8 சதவீத வளர்ச்சியினதும் அலகிற்கான விலையில் ஏற்பட்ட 4 சதவீத அதிகரிப்பினதும் இணைந்த விளைவால் ஐ.அ.டொலர் 5,757 மில்லியனுக்கு உயர்வடைந்து 2003 இல் பதிவு செய்யப்பட்ட 9 சதவீத வளர்ச்சியை விஞ்சிக் காணப்பட்டது. இவ்வளர்ச்சி வீதமானது 2000 இற்குப் பின்னர் ஏற்பட்ட மிக உயர்ந்த ஆண்டு வளர்ச்சி வீதமாக இருந்ததுடன் உயர்ந்த உலகளாவிய கேள்வியும் மேம்பட்ட ஏற்றுமதிப் போட்டித் தன்மையுமே இதற்கு காரணமாக அமைந்தன. அதேநேரம், அளவு (9 சதவீதம்) விலை (10 சதவீதம்) இரண்டிலும் ஏற்பட்ட அதிகரிப்புக்களின் காரணமாக இறக்குமதிகள் ஐ.அ.டொலர்கள் 8,000 மில்லியனுக்கு அதிகரித்து 2003 ஆம் ஆண்டின் 9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 20 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. இதன் விளைவாக, வர்த்தக மாற்று விகிதம் 2004 இல் 5.2 சதவீதத்தினால் மோசமடைந்ததுடன் இதற்கு இடைநிலை மற்றும் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி விலைகளில் ஏற்பட்ட மிகக்கூடியளவு அதிகரிப்பே காரணமாக இருந்தது. 2004 இன் வரட்சி, மசகெண்ணெய் மற்றும் உணவுப் பொருட்களின் உயர்ந்த இறக்குமதிகளைத் தேவைப்படுத்திய வேளையில் பன்னாட்டு எண்ணெய் விலைகள் வரலாற்றிலேயே மிக உயர்ந்த மட்டங்களை அடைந்து பெற்றோலியத்தின் இறக்குமதி உண்டியல்களை மிகக் கூடுதலாக அதிகரித்தன. இதன் விளைவாக வர்த்தகப் பற்றாக்குறை ஐ.அ.டொலர் 2,243 மில்லியனுக்கு விரிவடைந்தது. இப்பற்றாக்குறை வெளிநாட்டுப் பணவனுப்பல்கள் மற்றும் பணிகள் கணக்கின் தேறிய வருவாய்கள் என்பனவற்றின் மூலம் ஓரளவிற்கு நிதியிடப்பட்டதன் காரணமாக நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை ஐ.அ.டொலர் 648 மில்லியனுக்கு கட்டுப்படுத்தப்பட்டது.


உயர்ந்தளவு உலகளாவிய பொருளாதார வளர்ச்சியும் தொடர்ச்சியான யுத்த நிறுத்தத்தினால் உருவாக்கப்பட்ட சமாதான சூழலும், பணிகள் கணக்கின் மிகைக்கு பெருமளவிற்குப் பங்களித்த சுற்றுலாத் துறையின் வருவாய்கள் தொடர்ந்தும் அவற்றின் வேகமான வளர்ச்சியைப் பேண உதவின. 2004 இல் தொழிலாளர் பணவனுப்பல்கள் ஏறத்தாழ 11 சதவீதம் கொண்ட ஆரோக்கியமான வீதத்தில் வளர்ச்சியடைந்து நாட்டிற்கான பாரிய தேறிய உட்பாய்ச்சல் மூலமென்ற அதன் நிலையினை தக்கவைத்துக் கொண்டது. எனினும், பணிகள் மற்றும் மாற்றல் கணக்குகளில் காணப்பட்ட மிகைகள் வர்த்தக மற்றும் வருமானக் கணக்கில் காணப்பட்ட விரிந்த பற்றாக்குறையினை முழுமையாக எதிரீடு செய்ய போதுமானதாக இல்லாமையினால் நடைமுறைக் கணக்கு நிலுவை மோசமடைந்தது. இந்நிலைமையானது, அரசிற்கான வெளிநாட்டு உதவி பகிர்ந்தளிப்புக்களில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக நிதி மற்றும் மூலதனக் கணக்குகளுக்கான தேறிய உட்பாய்ச்சல் குறைவடைந்தமையினால் மேலும் தீவிரமடைந்தது. 2004 ஆம் ஆண்டுப்பகுதியில் நிதியியல் உட்பாய்ச்சலில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க அபிவிருத்தி யாதெனில், வெளிநாட்டு நேரடி முதலீடுகள், கடன் மூலதனம் மற்றும் சொத்துப்பட்டியல் முதலீடு ஆகிய வழிகளில் தனியார் துறைக்கு கிடைத்த மூலதனப் பாய்ச்சல்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பேயாகும். இது வெளிநாட்டு முதலீட்டாளர்களின் நம்பிக்கையில் ஏற்பட்ட முன்னேற்றத்தினை பிரதிபலிப்பதாகவுள்ளது. எனினும், மூலதனக் கணக்கிலும் நிதியியல் கணக்கிலும் ஏற்பட்ட தேறிய உட்பாய்ச்சல்கள் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையினை எதிரீடு செய்யப் போதுமானதாக இல்லாமை யினால், திரண்ட சென்மதிநிலுவை கடந்த மூன்றாண்டு களாக தொடர்ச்சியாக பதிவு செய்யப்பட்ட மிகைகளுக்கு மாறாக பற்றாக்குறையினைப் பதிவு செய்தது. இது வெளிநாட்டு அலுவல்சார் ஒதுக்குகளில் வீழ்ச்சி ஏற்பட வழிவகுத்ததுடன் செலாவணி வீதத்தின் மீதான அழுத்தத்தையும் அதிகரித்தது. இம்மோசமான சூழ்நிலையில் 2001 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையினால் தொடர்ச்சியாகப் பின்பற்றப்பட்டு வந்த சுதந்திரமாக மிதக்கின்ற செலாவணிவீத அமைப்பு

வரைபடம் 5.1
**வெளிநாட்டு வர்த்தகம்**


**இறக்குமதிகளினதும் ஏற்றுமதிகளினதும் பெறுமதி**





**ஏற்றுமதி இறக்குமதி அளவுச் சுட்டெண்கள்**
**(1997 = 100)**




**இறக்குமதிகளினதும் ஏற்றுமதிகளினதும் வர்த்தக மாற்று வீதமும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்களும்**
**(1997 = 100)**




வரைபடம் 5.2
**சென்மதி நிலுவைகள்**




வெளிநாட்டு திடீர் மாற்றங்களின் தாக்கத்தினை ஓரளவிற்கு தணிக்க உதவிய அதேவேளையில், நாடு அதன் வெளிநாட்டுப் போட்டித்தன்மையினைப் பேணுவதற்கும் உதவியது. அதேவேளை, மொ.உ. உற்பத்தியின் சதவீதமாக நாட்டின் மொத்த வெளிநாட்டுப் படுகடன் சிறிதளவால் வீழ்ச்சியடைந்து, இவ்வாண்டில் தேறிய கடன் மூலதன உட்பாய்ச்சல்கள் குறைந்தளவில் காணப்பட்டமையைப் பிரதிபலித்தது. படுகடன் பணிவிகிதம் குறைந்தளவிலும் முகாமைப் படுத்தத்தக்க மட்டங்களிலும் காணப்பட்டமை சாதகமானதொரு விடயமாகும்.

## 5.2 வெளிநாட்டுத்துறைக் கொள்கைகளும் நிறுவன ரீதியான ஆதரவும்

1994 இல் ப.நா.நிதிய உறுப்புரை VIII இனை ஏற்றுக் கொண்டதன் மூலம் இலங்கை வழங்கிய உத்தரவாதத்திற்கேற்ப 2004 இல் பன்னாட்டு வர்த்தகம் சுதந்திரமானதும் தாராளமானதுமான ஒரு சூழலில் தொழிற்பட்டது. திறந்த பொருளாதாரத்தினைக் கொண்ட சிறிய நாடு என்ற ரீதியில் தொடர்ச்சியாக மேம்பட்டு வரும் தாராள பொருளாதாரச் சூழல், வர்த்தகம், முதலீடு மற்றும் கொடுப்பனவு ஆகியவற்றில் நாடு கொண்டுள்ள பெருமளவு சுதந்திரம் என்பன கடந்த மூன்று தசாப்த காலமாக காணப்படும் வெளிநாட்டு திடீர் மாற்றங்கள் மற்றும் மோசமான சூழ்நிலைகளுக்கிடையிலும் நாடு அதன் வளர்ச்சி வேகத்தினைப் பேணுவதற்கு அளவற்ற விதத்தில் நன்மையளித்திருக்கின்றன. எனினும், பாரியதும் ஏற்றஇறக்கங்களைக் கொண்டதுமான மூலதனப் பாய்ச்சல்களிலிருந்து நாட்டைப் பாதுகாத்துக் கொள்வதற்காக மட்டுப்படுத்தப்பட்ட மூலதனக் கணக்கு கட்டுப்பாடுகள் இன்னமும் நடைமுறையில் இருந்து வருகின்றன.

2001 ஆம் ஆண்டிலிருந்து பேணப்பட்டு வருகின்ற சுதந்திரமாக மிதக்க விடப்படுகின்ற செலாவணிவீத அமைப்பு பொருளாதாரத்திற்கு குறிப்பாக ஏற்றுமதித் துறைக்கு நன்கு உதவி வருகின்றது. இத்துறை குறித்த ஒரு சில ஆண்டுகளில் காணப்பட்ட சில தடங்கல்கள் நீங்கலாக மற்றைய காலங்களில் தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்து வந்திருக்கிறது. இது, இலங்கையின் பொருளாதார அடிப்படைகள் உலகின் எஞ்சிய பகுதிகளுடனும் பரந்தளவில் இணைந்து செல்வதற்கு ஏற்ற விதத்தில் நாணய அசைவுகள் பரந்தளவிற்கு தன்னியக்கமாகவே மாறிக்கொள்ள உதவியாக இருந்தமையின் விளைவாக நாடு அதன் வெளிநாட்டுப் போட்டித்தன்மையினை பேண உதவியது.

2004 இல் பல்வேறு பல்புடை மற்றும் இருபுடை ஒழுங்குகள் மற்றும் பேச்சுவார்த்தைகளை மேற்

அட்டவணை 5.1

## சென்மதி நிலுவை பகுப்பாய்வு வெளிப்படுத்துகை

**(வர்த்தக வங்கிகளின் வெ.நா.வ.தொ. பிரிவுகள் உள்நாட்டு வங்கித் தொழில் முறைமின் பகுதியொன்றாக உள்ளடக்கப்பட்டுள்ளன)(அ)**

| விடயம் | ஐ.அ.டொலர் மில்லியன் | | | | | ரூபா மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2000 | 2001 | 2002 | 2003 | 2004(ஆ) | 2000 | 2001 | 2002 | 2003 | 2004(ஆ) |
| வர்த்தக நிலுவை | -1,798 | -1,157 | -1,406 | -1,539 | -2,243 | -134,176 | -102,592 | -134,706 | -148,324 | -227,171 |
| ஏற்றுமதிகள் | 5,522 | 4,817 | 4,699 | 5,133 | 5,757 | 420,114 | 430,372 | 449,855 | 495,426 | 583,967 |
| இறக்குமதிகள் | 7,320 | 5,974 | 6,106 | 6,672 | 8,000 | 554,290 | 532,964 | 584,561 | 643,750 | 811,138 |
| பணிகள், (தேறிய) (இ) | 38 | 204 | 295 | 399 | 419 | 2,907 | 14,692 | 28,224 | 38,443 | 42,735 |
| பெறுகைகள் | 953 | 1,355 | 1,268 | 1,411 | 1,527 | 72,187 | 120,937 | 121,340 | 136,123 | 154,746 |
| கொடுப்பனவுகள் | 915 | 1,151 | 974 | 1,012 | 1,108 | 69,280 | 106,246 | 93,115 | 97,680 | 112,011 |
| வருமானம் (தேறிய) | -305 | -267 | -252 | -172 | -204 | -23,009 | -23,842 | -24,167 | -16,535 | -20,688 |
| மீளப் பெறுகைகள் | 152 | 108 | 75 | 170 | 157 | 11,568 | 9,584 | 7,201 | 16,385 | 15,813 |
| கொடுப்பனவுகள் | 456 | 375 | 328 | 341 | 360 | 34,577 | 33,425 | 31,368 | 32,920 | 36,501 |
| **பொருட்கள், பணிகள் வருமானம் (தேறிய)** | **-2,064** | **-1,220** | **-1,364** | **-1,312** | **-2,028** | **-154,278** | **-111,742** | **-130,648** | **-126,416** | **-205,124** |
| தனியார் மாற்றல்கள் (தேறிய) | 974 | 984 | 1,097 | 1,205 | 1,350 | 73,620 | 87,837 | 104,980 | 116,350 | 136,672 |
| பெறுகைகள் (ஈ) | 1,160 | 1,155 | 1,287 | 1,414 | 1,564 | 87,697 | 103,180 | 123,183 | 136,475 | 158,291 |
| கொடுப்பனவுகள் | 186 | 172 | 190 | 209 | 214 | 14,078 | 15,343 | 18,202 | 20,125 | 21,619 |
| அலுவல்சார் மாற்றல்கள் (தேறிய) | 24 | 22 | 31 | 36 | 30 | 1,801 | 1,925 | 2,982 | 3,441 | 3,038 |
| **நடைமுறைக் கணக்கு** | **-1,066** | **-215** | **-236** | **-71** | **-648** | **-78,857** | **-21,980** | **-22,686** | **-6,625** | **-65,414** |
| **மூலதன, நிதியியல் கணக்குகள்** | **443** | **562** | **444** | **722** | **636** | **31,827** | **49,077** | **40,639** | **69,723** | **62,138** |
| மூலதனக் கணக்கு | 50 | 198 | 65 | 74 | 64 | 3,795 | 17,766 | 6,219 | 7,146 | 6,573 |
| மூலதன மாற்றல்கள் (தேறிய) (உ) | 50 | 198 | 65 | 74 | 64 | 3,795 | 17,766 | 6,219 | 7,146 | 6,573 |
| பெறுகைகள் | 56 | 203 | 71 | 81 | 71 | 4,230 | 18,241 | 6,782 | 7,768 | 7,242 |
| கொடுப்பனவுகள் | 6 | 5 | 6 | 6 | 7 | 435 | 475 | 563 | 622 | 669 |
| நிதியியல் கணக்குகள் | 393 | 364 | 379 | 648 | 572 | 28,032 | 31,311 | 34,420 | 62,577 | 55,565 |
| நீண்டகாலம் | 304 | 163 | 326 | 722 | 684 | 22,594 | 14,337 | 28,911 | 69,721 | 69,805 |
| நேரடி முதலீடுகள் | 176 | 172 | 185 | 201 | 227 | 13,319 | 15,271 | 17,716 | 19,450 | 22,826 |
| வெளிநாட்டு நேரடிமுதலீடு | 173 | 82 | 181 | 171 | 217 | 13,119 | 7,310 | 17,281 | 16,557 | 21,948 |
| தனியார் மயமாக்கல் பெறுகைகள் | 3 | 90 | 5 | 30 | 10 | 200 | 7,961 | 435 | 2,893 | 878 |
| தனியார் நீண்டகாலம் (தேறிய) | 82 | -257 | -21 | -33 | 18 | 5,622 | -22,918 | -2,039 | -3,201 | 2,270 |
| உட்பாய்ச்சல் (ஊ) | 298 | 44 | 115 | 101 | 169 | 22,134 | 4,016 | 11,007 | 9,738 | 17,503 |
| வெளிப்பாய்ச்சல் (உ) | 216 | 301 | 136 | 134 | 151 | 16,512 | 26,934 | 13,046 | 12,939 | 15,233 |
| அரச நீண்டகாலம் (தேறிய) | 47 | 249 | 162 | 554 | 439 | 3,653 | 21,984 | 13,233 | 53,472 | 44,709 |
| உட்பாய்ச்சல் | 355 | 575 | 542 | 913 | 771 | 26,965 | 51,193 | 51,843 | 88,106 | 78,299 |
| வெளிப்பாய்ச்சல் | 308 | 326 | 380 | 359 | 331 | 23,312 | 29,209 | 38,610 | 34,634 | 33,590 |
| குறுங்காலம் | 88 | 201 | 53 | -75 | -112 | 5,438 | 16,974 | 5,509 | -7,145 | -14,240 |
| பட்டியலிடப்பட்டமுதலீடுகள்(தேறிய) | -45 | -11 | 25 | 2 | 11 | -3,355 | -1,025 | 2,443 | 209 | 1,109 |
| தனியார் குறுங்கால (தேறிய) | 100 | -42 | 68 | 19 | 28 | 7,569 | -3,798 | 6,548 | 1,877 | 2,514 |
| வர்த்தக வங்கிச் சொத்துக்கள் (தேறிய) | -141 | 183 | 104 | -94 | -354 | -18,736 | 2,867 | 6,893 | -9,090 | -45,367 |
| வர்த்தக வங்கிப் பொறுப்புக்கள்(தேறிய) | 174 | 71 | -145 | -2 | 202 | 19,960 | 18,929 | -10,375 | -141 | 27,504 |
| அரச குறுங்கால (தேறிய) | - | - | - | - | - | - | - | - | - | - |
| சிஎஉ ஒதுக்கீடுகள் | - | - | - | - | - | - | - | - | - | - |
| பெறுமதி சீராக்கம் | - | - | 93 | - | - | 5,189 | 22,245 | 8,900 | - | - |
| பிழைகளும் தவறுகளும் | 101 | -127 | 38 | -148 | -193 | 10,902 | -19,578 | 9,197 | -14,487 | -4,198 |
| **திரண்ட நிலுவை(எ)** | **-522** | **220** | **338** | **502** | **-205** | **-30,939** | **29,765** | **36,051** | **48,610** | **-7,474** |
| நாணய அசைவுகள்(எ) | 522 | -220 | -338 | -502 | 205 | 30,939 | -29,765 | -36,051 | -48,610 | 7,474 |
| செலாவணி வீதங்கள் ரூபா/ ஐ.அ.டொ. | | | | | | 75.78 | 89.36 | 95.66 | 96.52 | 101.19 |
| மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான விகிதம் சதவீதத்தில் | | | | | | | | | | |
| வர்த்தகக் கணக்கு | -10.8 | -7.4 | -8.5 | -8.4 | -11.4 | -10.7 | -7.3 | -8.5 | -8.4 | -11.4 |
| நடைமுறைக் கணக்கு | -6.4 | -1.4 | -1.4 | -0.4 | -3.3 | -6.3 | -1.6 | -1.4 | -0.4 | -3.3 |
| கொடைகளற்ற நடைமுறைக்கணக்கு | -6.6 | -1.5 | -1.6 | -0.6 | -3.4 | -6.4 | -1.7 | -1.6 | -0.6 | -3.4 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) இவ்விபரம் பன்னாட்டு நாணய நிதியத்தின் சென்மதி நிலுவைக் கையேட்டின் 5ஆம் பதிப்புடன் (1993)சாத்தியமான அளவுக்கு இணங்கிச் செல்லும் விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது.

(ஆ) தற்காலிகமானவை.

(இ) 2001இல் பணிப் பெறுகைகள், 2001 யூலையில் வானூர்தி நிலைய தாக்குதலிக்போது அழிக்கப்பட்ட வானூர்திகளுக்காக காப்புறுதிக் கட்டணமாக சிறிலங்கன் ஏயர்லைன்சினால் பெறப்பட்ட ஐ.அ.டொலர் 382.4 மில்லியனையும் உள்ளடக்குகின்ற வேளையில் 2001ஆம் ஆண்டின் பணிக்கொடுப்பனவுகள் வானூர்தி வாடகைக் காரருக்குச் செலுத்தப்பட்ட ஐ.அ.டொலர் 292.8 மில்லியனை உள்ளடக்குகிறது. இக் காப்புறுதிக் கோரல்களின் தேறிய பெறுகைகள் ஐ.அ.டொலர் 89.6 மில்லியனாக இருந்தன.

(ஈ) 1990இல் வளைகுடா யுத்தத்தின் காரணமாக குவைத்தில் வேலைவாய்ப்பை இழந்த இலங்கையர் 29,323 பேருக்கு தலா ஐ.அ.டொலர் 2,500 வீதம் பெற்றுக் கொள்ளப்பட்ட ஐ.அ.டொலர் 45 மில்லியன் இழப்பீட்டை உள்ளடக்குகின்றது.

(உ) தனியார் மூலதன வெளிப்பாய்ச்சலின் கீழான தொழில்நுட்பக் கடன் தீர்ப்பனவு தொடர்பான ஐ.அ.டொலர் 147.6 மில்லியனையும் 2001 யூலையில் வானூர்நிலைய தாக்குதலின்போது அழிக்கப்பட்ட வானூர்தியின் எஞ்சிய மூலதனத்துக்கான 2001இன் மூலதனமாற்றல் பெறுகைகளின் கீழான தொடர்பான சீராக்கங்களையும் உள்ளடக்குகிறது.

(ஊ) முன்னைய ஆண்டுகளில் முற்பணம் செலுத்தப்பட்டிருந்து இறக்குமதி செய்யப்பட்ட வானூர்திகளின் பேரில் மூலதன உட்பாய்ச்சலுக்கு 2000இல் செய்யப்பட்ட சீராக்கங்களையும் உள்ளடக்குகின்றது.

(எ) நாணயத் துறையிலான எல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் ஆண்டிறுதிச் செலாவணி வீதங்களில் மாற்றப்பட்டுள்ளன.

கொண்டமையின் மூலம் வெளிநாட்டு வர்த்தக சூழல் வலுவாக்கப்பட்டது. ஐ.அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், அவுத்திரேலியா மற்றும் யப்பான் போன்ற முக்கிய நாடுகளினால் மற்றைய போட்டியாளர்களின் மீது விதிக்கப்பட்ட தீர்வைக்கு எதிராக இலங்கை மீது விதிக்கப்பட்ட சமமற்ற தீர்வைகளுக்கு தீர்வொன்றினை காண்பதற்காக உலக வர்த்தக அமைப்பு மன்றத்துடன் இலங்கை பேச்சுவார்த்தைகளை நடாத்தியது. கன்குன் அமைச்சரவைக் கூட்டம் முறிவடைந்ததன் விளைவாக உலக வர்த்தக அமைப்பின் பேச்சுவார்த்தைகளில் காணப்பட்ட உற்சாகமற்ற செயலாற்றமானது, வேளாண்மை, வேளாண்மையல்லா சந்தைகளை நாடுதல் மற்றும் அபிவிருத்தி விடயங்கள் ஆகிய துறைகளில் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்காக டோகா அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் கீழ் உலக வர்த்தக அமைப்புப் பொதுச் சபையினால் கட்டமைப்பொன்று உருவாக்கப்பட்டதன் மூலம் மாற்றமடைந்தது. அபிவிருத்தியடைந்த நாடுகளிலுள்ள வேளாண்மை மற்றும் வேளாண்மையல்லாச் சந்தைகளில் பெருமளவிற்கு நுழைந்து கொள்வதனூடாக இவ்வபிவிருத்திகளிலிருந்து நன்மைகளைப் பெற்றுக் கொள்வதே இலங்கையின் நிலைப்பாடாகும். 2004 இல் உலக வர்த்தக அமைப்பு இலங்கையின் வர்த்தகக் கொள்கை தொடர்பிலான இரண்டாவது மீளாய்வினைப் பூர்த்தி செய்தது. இம்மீளாய்வில், 1995 ஆம் ஆண்டின் பின்னரான சில அபிவிருத்திகள் குறித்து உலக வர்த்தக அமைப்பின் உறுப்பினர்கள் கரிசனைகளை வெளியிட்ட வேளையில் இலங்கையின் கொள்கைப் போக்குகள் தொடர்பாக பெருமளவிற்கு சாதகமாக நடந்து கொண்டனர்.

2004 இல் நடைபெற்ற வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி மீதான ஐக்கிய நாடுகள் மாநாட்டின் பதினோராவது கூட்டத் தொடரில் படுகடன் நிவாரணம் மற்றும் படுகடன் உறுதிப்பாட்டுத் தன்மை, சிறியதும் பாதிப்படையக்கூடியதுமான தேறிய உணவு இறக்குமதிப் பொருளாதாரங்களினது குறித்துரைக்கப்பட்ட தேவைகள், ஆட்களின் அசைவுகளூடாக சந்தைகளில் நுழைதல், வர்த்தகத்துடன் தொடர்பான புலமைச்சொத்து உரிமைகள் பற்றிய இலங்கையுடன் தொடர்பான பிரச்சனைகள், வர்த்தக முன்னுரிமைகளின் உலகளாவிய முறையின் கீழான நன்மைகள் மற்றும் இயலளவினைக் கட்டியெழுப்புவதற்கான தொழில்நுட்ப உதவி ஆகியவை தொடர்பான கலந்துரையாடல்களில் இலங்கை பங்கேற்றது.

பிராந்திய ஒத்துழைப்பு நாடுகளுக்கான தென்னாசிய அமைப்பு முழுவதனையும் (சார்க்) கருத்திற் கொண்டு ஒன்று சேர்ந்த அடிப்படையின் மீது மூலப் பிரமாணங்களின் ஒழுங்குவிதிகளுக்கு மாற்றங்களைச் செய்வதனூடாக பங்கேற்கின்ற அபிவிருத்தியடைந்த நாடுகளிடமிருந்து பொதுவாக்கப்பட்ட முன்னுரிமை முறைகளின் கீழ் பெருமளவு நன்மைகளைப் பெற்றுக் கொள்வதில் இலங்கை தொடர்ந்தும் தீவிரமாக ஈடுபட்டது. அண்மைய சுனாமி அனர்த்தத்தினைக் கருத்திற்கொண்டு, பொதுவாக்கப்பட்ட முன்னுரிமை முறையின் கீழ் இலங்கைக்கு சிறப்புச் சலுகைகளை வழங்குவது பற்றி ஐரோப்பிய ஒன்றியம் பரிசீலனை செய்து வருகின்றது. இதற்குப் புறம்பாக, இலங்கையின் சிறந்த தொழிலாளர் நடைமுறைகளைக் கருத்திற் கொண்டு ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து இலங்கை ஏற்கனவே சிறப்பு ஊக்குவிப்புக்களைப் பெற்றுள்ளது.

பிராந்தியப் பக்கத்தில், சார்க் நாடுகளின் தலைவர்கள் 2006 சனவரி 1 ஆம் நாளிலிருந்து தென்னாசிய முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கையினை (சப்தா) நிறுவுவதற்கு உடன்பட்டனர். சப்தா உடன்படிக்கையின் கீழ் பிராந்தியங்களிடையேயான வர்த்தகம் மற்றும் முதலீடுகளை மேம்படுத்துவதற்காக தீர்வைகளைக் குறைப்பதற்காகவும், தீர்வையல்லா மற்றும் துணைத் தீர்வைத் தடைகளை அகற்றுதல் என்பனவற்றிற்காக கடுமையான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். வங்காளதேசம், இந்தியா, மியன்மார், இலங்கை மற்றும் தாய்லாந்து நாடுகளின் பொருளாதார ஒத்துழைப்பு என முன்னர் அறியப்பட்ட பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பிற்கான வங்காள விரிகுடா அமைப்பின் (பிம்ஸ்ரெக்) உறுப்பினர்கள் 2004 பெப்புருவரியில் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையொன்றினை ஏற்படுத்துவதற்கான கட்டமைப்பு உடன்படிக்கையொன்றில் கையெழுத்திட்டனர். அரச தலைவர்கள் கலந்து கொண்ட முதலாவது பிம்ஸ்ரெக் உச்சி மாநாடு 2004 யூலையில் தாய்லாந்தில் நடைபெற்றது. உச்சி மாநாடு குற்றவாளிகளையும், பயங்கரவாதிகளையும் நாடு கடத்தல், நோய்களை ஒழித்தல் மற்றும் கட்டுப்படுத்தல், வறுமை ஒழிப்பு, சுற்றுலா, வலு, மீன்பிடி, சுதேச மருத்துவம் மற்றும் புலமை என்பனவற்றை மேம்படுத்தல் போன்ற பரந்தளவான விடயங்கள் மீது கவனம் செலுத்தியது.

2004 இல் இருபுடை வர்த்தக உறவுகளில் பல முன்னேற்றங்கள் காணப்பட்டன. வர்த்தகத்திலான பணிகளையும் முதலீடுகளையும் ஒன்றிணைத்து இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையினை அனைத்தையும் உள்ளடக்கிய பொருளாதார நட்புறவு உடன்படிக்கையாக மாற்றியமைப்பதற்கு இலங்கையும் இந்தியாவும் உடன்பட்டன. 2005 பெப்புருவரியில் பாகித்தான், இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (பாஇசுவஉ) கைச்சாத்திடப்பட்டது. பாகித்தான் இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ், இலங்கை 206 பொருட்களுக்ககு தீர்வையற்ற நுழைவுரிமையை

அட்டவணை 5.2
**சராசரி இறக்குமதித் தீர்வை சேகரிப்பு வீதம் (அ)**

| விடயம் | 2000 | 2001(ஆ) | 2002(ஆ) | 2002(இ) | 2004 (ஈ) |
|---|---|---|---|---|---|
| **நுகர்வுப் பொருட்கள்** | **11.5** | **13.3** | **13.3** | **13.5** | **10.4** |
| உணவும் குடிபானமும் | 11.7 | 15.3 | 14.4 | 14.2 | 8.5 |
| அரிசி | 30.0 | 21.2 | 32.9 | 29.1 | 4.9 |
| மா | 6.2 | 13.3 | 12.3 | 11.5 | 7.2 |
| சீனி | 15.9 | 16.2 | 16.0 | 16.8 | 4.6 |
| கோதுமையும் மெசுலீனும் | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.1 |
| பாலும் பால் உற்பத்தியும் | 10.6 | 15.3 | 11.9 | 12.2 | 7.9 |
| கருவாடு | 1.3 | 2.0 | 7.9 | 10.8 | 5.9 |
| ஏனைய மீன் உற்பத்திகள் | 5.1 | 6.3 | 6.8 | 7.9 | 10.0 |
| ஏனைய உணவு விடயங்கள் | 18.7 | 25.4 | 22.9 | 22.3 | 17.4 |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 11.3 | 10.9 | 12.1 | 13.0 | 12.2 |
| உந்துஊர்திகளும் துவிச்சக்கர வண்டிகளும் | 16.6 | 21.1 | 23.3 | 22.1 | 21.1 |
| வானொலிப்பெட்டிகளும் தொலைக்காட்சி பெட்டியும் | 6.8 | 8.3 | 8.6 | 8.9 | 9.4 |
| இறப்பர் ரயரும் ரியூப்பும் | 23.5 | 29.6 | 27.9 | 26.0 | 25.8 |
| மருந்து மற்றும் மருந்தாக்கல் | 0.5 | 0.6 | 0.6 | 0.6 | 0.6 |
| ஏனைய உணவல்லா விடயங்கள் | 11.1 | 9.7 | 9.4 | 9.2 | 8.9 |
| **நடுத்தரப் பொருட்கள்** | **2.9** | **1.7** | **1.6** | **1.5** | **1.9** |
| வளமாக்கி | - | - | 0.4 | 2.6 | 3.1 |
| மசகெண்ணெய் | 7.4 | ... | 0.0 | 0.0 | 0.0 |
| ஏனைய பெற்றோலிய உற்பத்திகள் | 5.3 | 0.9 | 0.8 | 0.8 | 0.9 |
| இரசாயன கூறுகளும் கலவைகளும் | 3.2 | 3.3 | 1.1 | 2.2 | 2.6 |
| நிறமூட்டல், தோல்பதனிடல், வர்ணமிடல் | 5.2 | 6.3 | 4.0 | 4.6 | 4.5 |
| தாளும் தாள் மட்டையும் | 5.0 | 6.7 | 5.2 | 5.4 | 6.0 |
| புடவையும் ஆடையும் | 0.1 | 0.1 | 0.1 | 0.1 | 0.0 |
| ஏனைய நடுத்தரப் பொருட்கள் | 3.5 | 4.2 | 4.3 | 3.3 | 4.3 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | **4.0** | **5.3** | **5.5** | **7.2** | **6.1** |
| கட்டடப்பொருட்கள் | 7.5 | 9.3 | 7.4 | 7.7 | 9.0 |
| போக்குவரத்துக் கருவிகள் | 7.4 | 10.3 | 11.0 | 12.9 | 11.9 |
| பொறிகளும் கருவிகளும் | 1.8 | 2.7 | 3.7 | 5.6 | 3.2 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 3.2 | 4.2 | 3.8 | 4.6 | 5.0 |
| **மொத்தம்** | **4.5** | **4.9** | **4.8** | **5.3** | **4.5** |

(அ) மொத்த இறக்குமதிப் பெறுமதியின் சதவீதமாக உண்மையான இறக்குமதித் தீர்வைச் சேகரிப்பு

(ஆ) இது 2001 பெப்புருவரி 21 இல் தேர்ந்தெடுக்கப்பட்ட இறக்குமதிகளில் மீது விதிக்கப்பட்ட 40 சதவீத மேலதிகக் கட்டணத்தையும், 2002 ஏப்பிறல் 1இல் விதிக்கப்பட்ட 20 சதவீத மேலதிகக் கட்டணத்தையும் உள்ளடக்குகிறது.

(இ) இது 2003 சனவரி 1இல் தேர்ந்தெடுக்கப்பட்ட இறக்குமதிகளில் விதிக்கப்பட்ட 20 சதவீத மேலதிகக் கட்டணத்தினை உள்ளடக்குகின்றது.

(ஈ) தற்காலிகமானவை

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்.
கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம்.
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.
வரையறுக்கப்பட்ட பிறிமா இலங்கை

பெறும். மேலும் அனுமதிப் பங்கீட்டு முறையில் பாகித்தானுக்கான தேயிலை ஏற்றுமதிகளுக்கு இலங்கை தீர்வையற்ற நுழைவுரிமையைப் பெற்றுக்கொள்ளும். 1970 பதுகளில் இலங்கைத் தேயிலைக்கான பிரதான மானதொரு சந்தையாக பாகித்தான் விளங்கியது. தனது பங்கினை அதன் பின்னர் படிப்படியாக கென்யாவிடம் இழந்தது. இழந்த சந்தைப் பங்கில் சிலவற்றை மீண்டும் கைப்பற்றிக் கொள்வதற்கு இவ்வுடன்படிக்கை வழிவகுக்கும்.

இலங்கைக்கும் ஈரானுக்குமிடையிலான பொருளாதார ஒத்துழைப்பிற்கான கூட்டு ஆணைக்குழுவின் ஏழாவது கூட்டம் 2004 சனவரியில் நடாத்தப்பட்டதுடன், இரு நாடுகளும் முன்னுரிமை வாய்ந்த வர்த்தக உடன்படிக்கையினை அமைப்பதற்கு உடன்பட்டன. ஐரோப்பிய ஆணைக்குழுவுக்கும் இலங்கைக்குமிடையிலான கூட்டு ஆணைக்குழுவின் 16 ஆவது கூட்டத் தொடரில் 2004 ஒத்தோபரில் நடைபெற்ற ஆடைகளுக்கான அனுமதிப் பங்கீட்டை இல்லாதொழிப்பது தொடர்பாக பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டது. பாங்கொக் உடன்படிக்கையின் கீழ் இடம்பெற்ற மூன்றாவது சுற்றுப் பேச்சுவார்த்தையில், இலங்கை பல்வேறு ஏற்றுமதிப் பொருட்கள் தொடர்பாக முன்னுரிமைச் சலுகையைப் பெற்றுக்கொண்டது. 2004இல் இலங்கைக்கும், சிங்கப்பூருக்குமிடையில் அனைத்தையும் உள்ளடக்கிய பொருளாதார நட்புறவு உடன்படிக்கையினை உருவாக்குவது தொடர்பாக சில சுற்றுப் பேச்சுவார்த்தைகள் 2004 இல் நடைபெற்றன.

பல்புடை மற்றும் இருபுடை பேச்சுவார்த்தைகள் மூலம் அதிகரித்த சந்தை நுழைவுகளுக்கு வழியமைத்தமைக்கு மேலதிகமாக, ஏற்றுமதியாளர்களுக்கு அரசாங்கம் பரந்துபட்ட ஆதரவினை வழங்கியிருக்கின்றது. குறைந்த பட்ச முதலீட்டுத் தேவைப்பாடுகளுக்குட்பட்டு இலங்கை முதலீட்டுச் சபையில் பதிவு செய்யப்பட்ட ஏற்றுமதியாளர்களுக்கு சிறப்பு ஊக்குவிப்பு திட்டங்கள் 2004 இல் கிடைக்கச் செய்யப்பட்டன. இந்த ஊக்குவிப்புத் திட்டங்கள் வரி விடுமுறைகள், சலுகை ரீதியான வரிகள், மற்றும் மூலதனப் பொருட்கள் மற்றும் மூலப் பொருட்கள் என்பவற்றின் மீதான இறக்குமதித் தீர்வை விலக்குகளையும் உள்ளடக்கியிருந்தன. வர்த்தகம் மற்றும் முதலீடுகள் மீதான பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச்சபை அரசாங்கம் மற்றும் தொழில் முயற்சியாளர்களை ஒன்றுசேர்த்து ஏற்றுமதியாளர்களுக்கான கருத்தரங்குகளை தொடர்ச்சியாக ஒழுங்கு செய்தமைக்குப் புறம்பாக சந்தைப்படுத்தல், நிதியியல் மற்றும் பன்னாட்டு தரவு மையத்தை உடனடியாக அணுகுதல் ஆகிய வசதிகளையும் வழங்குகிறது. தனியார் மற்றும் அரச துறைகள் இரண்டினதும் உள்ளீடுகளுடன் 2004-2008 காலப்பகுதியை உள்ளடக்கிய விதத்தில் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச்சபை தேசிய ஏற்றுமதி தந்திரோபாயமொன்றினை வடிவமைத்துள்ளது. ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதி மற்றும் உத்தரவாதங்கள் மூலம் இலங்கை ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஏற்றுமதியாளர்களுக்கான உதவியைத் தொடர்ந்தும் வழங்கியது. தொடர்புடைய இலங்கை நியமங்களுக்கெதிராக இலங்கைக் கட்டளைகள் நிறுவனம் ஏற்றுமதிப் பொருட்களுக்கான தர உத்தரவாதத்தை வழங்கியது. வெளிநாட்டு வர்த்தகத்தை மேம்படுத்துவதற்காக பொருளாதார அபிவிருத்திக்கான தேசிய சபையின் வர்த்தக மற்றும் தீர்வை கொத்தணி மற்றும் ஏற்றுமதி கொத்தணி என்பன 2004 இல் வர்த்தகம் தொடர்பான பிரச்சனைகளை மீளாய்வு செய்து பொருத்தமான விதந்துரைப்புக்களைச் செய்தன. ஏற்றுமதியாளர்களின் பெறுமதி கூட்டலை அதிகரிப்பதை மையமாகக் கொண்டு 2005 வரவு செலவுத் திட்டத்தில் மேலும் பல ஊக்குவிப்புக்கள் முன்மொழியப்பட்டுள்ளன. இவை இடைநிலைப் பண்டங்களின் உள்நாட்டு வழங்குநர்களுக்கான பெறுமதிசேர் வரியினைக் குறைத்தல், முன்னேற்றங்கண்ட தொழில்நுட்பத்தைப் பெற்றுக்கொள்வதற்கான தீர்வை விலக்குச் சலுகைகள், தொழில் நுட்ப முன்னேற்றத்திற்கான நிதி உதவி, பெறுமதிசேர் வரி பிரயோகங்களை இலகுபடுத்துதல், மற்றும் ஆடைகளை வாங்கும் அலுவலகங்களுக்கு பூச்சிய வீதமிடப்பட்ட பெறுமதிசேர் வரி அமைப்பு என்பனவற்றை உள்ளடக்கியுள்ளன.

சில ஏற்றுமதி வகைகள் தீர்வைக்குட்பட்டவையாக இருந்ததுடன், இவை தொடர்புடைய கைத்தொழில்களுக்கான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான நிதிகளை உருவாக்குகின்றன. தேயிலை மற்றும் தெங்கு ஏற்றுமதிகள் மீதான நடைமுறையிலுள்ள தீர்வை தவிர, 2004 இல் கறுவா ஏற்றுமதிகள் மீதான தீர்வை அறிமுகப்படுத்தப்பட்டதுடன் இறப்பர் ஏற்றுமதிகள் மீதான தீர்வை மீள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. இலங்கையின் போட்டித் தன்மையினை அதிகரித்தல், இறை வருமானத்தை உயர்த்துதல், தீர்வைக் கட்டமைப்பை இலகுபடுத்தல், மற்றும் வாழ்க்கைச் செலவினைக் குறைத்தல் போன்ற பல்வேறு நோக்கங்களுக்காக 2004 இல் இறக்குமதித் தீர்வைக் கட்டமைப்பில் பல மாற்றங்கள் செய்யப்பட்டன. எனினும், ஒரே நேரத்தில் சகல நோக்கங்களையும் நிறைவேற்றுதல் கடினமானது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, 2004 சனவரி 1 இல் வருமானத்தை உயர்த்துவதற்காக தீர்வைப் பிரிவுகள் 2.5, 5, 10, 15, 20 மற்றும் 25 சதவீதங்களிலிருந்து முறையே 3, 6, 12, 16, 20 மற்றும் 27.5 சதவீதமாக மாற்றியமைக்கப் பட்டபோதும், இது உற்பத்திச் செலவினையும் கூட உயர்த்தியுள்ளது. அதேவேளை, கோதுமைத் தானியம், மசகு எண்ணெய், சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள், அச்சிடப்பட்ட நூல்கள், இரத்தினக்கல் மற்றும் தங்கம், ஆடைகள், நெல், மரக்கறி விதைகள் மற்றும் மருந்தாக்கற் பொருட்கள் என்பனவற்றின் மீது தீர்வைத் தளர்த்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. இத்தளர்த்தல்களைத் தொடர்ந்து உள்நாட்டு விலை உயர்வுகளைக் கட்டுப்படுத்துவதற்காக 2004 பெப்புருவரி 1 இல் பருப்பு மீது முழு தீர்வைத் தளர்த்தல் மற்றும் உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம், மிளகாய் மற்றும் பால் மா என்பன மீதான குறைக்கப்பட்ட தீர்வை என்பவற்றை உள்ளடக்கிய மேலுமொரு தொகுதி முழுமையான மற்றும் பகுதியளவான தீர்வைத் தளர்த்தல்கள் வழங்கப்பட்டன. ஆண்டின் எஞ்சிய காலப்பகுதியில், பொதுமக்களுக்கு மேலும் நிவாரணமளிக்குமுகமாக சீனி மற்றும் அரிசி மீது தீர்வைத் தளர்த்தல்கள் வழங்கப்பட்டதெனினும், பெரிய வெங்காயம் மற்றும் பழுப்பு சீனி என்பவற்றின் மீது தீர்வை மீள விதிக்கப்பட்டது. (சிறப்புக் குறிப்பு 5 இனைப் பார்க்கவும்)

பயன்படுத்திய வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான ஆகக்கூடிய காலம் 2004 இன் ஆரம்பத்திலிருந்து 6 மாதங்களினால் மூன்றரை வருடங்களுக்கு விரிவுபடுத்தப்பட்ட போதும், உயர் பெறுமதி வாய்ந்ததும் மற்றும் எரிபொருள் சிக்கன மற்றதுமான மோட்டார் வாகனங்களின் மேலதிக இறக்குமதிகளை ஊக்கமிழக்கச் செய்யும்முகமாக,

எண்ணெய் விலை அதிகரிப்பினைத் தொடர்ந்து எரிபொருள் சிக்கன நடவடிக்கையொன்றாக 2004 ஒத்தோபர் 15 இல் தீர்வை வரி அதிகரிக்கப்பட்டது. இந்த இறக்குமதிகளை 100 சதவீத வைப்புத் தேவைப்பாட்டுக்குட்படுத்தியதன் மூலம் இந்த நடவடிக்கை மேலும் வலுப்படுத்தப்பட்டது. இறுதியாக, 2004 நவெம்பர் 19 இல் ஆறு தீர்வைப் பிரிவுகள் அமைப்பு 2005 இன் வரவு செலவுத் திட்டத்தில் 2005 இன் தொடக்கத்தில் நடைமுறைக்குவரும் விதத்தில் 2.5, 6, 15 மற்றும் 28 சதவீதத்தை உள்ளடக்கியதாக ஐந்து தீர்வைப் பிரிவுகள் அமைப்பிற்கு குறைக்கப்பட்டது. இலங்கையின் தீர்வை வடிவமைப்புக்கு வழிகாட்டு முகமாக 2004 இல் சனாதிபதி தீர்வை ஆணைக்குழு, பொருளாதார அபிவிருத்திக்கான தேசிய சபையின் ஒரு கொத்தணியாக மீளவடிமைக்கப்பட்டது. பல தரப்பட்ட தீர்வைத் தளர்த்தல்கள் மற்றும் தீர்வைக் குறைப்புக்கள் என்பவற்றின் இறுதி விளைவு யாதெனில் ஏற்றுமதிகளின் மீதான சராசரித் தீர்வை வீழ்ச்சியடைந்து, 2004 இல் பெருமளவு தாராளமயமான வர்த்தக முறைமை நிலவியமை பிரதிபலிக்கப்பட்டது. 2004 இல் நிறையேற்பட்ட சராசரித் தீர்வை 5.3 சதவீதத்திலிருந்து 4.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. ஆயினும், குறைந்தளவிலானதும் மற்றும் எதிர்வு கூறத்தக்கதுமான தீர்வை அமைப்பினைப் பேணுவது முதலீட்டாளரின் நம்பிக்கையினை மேம்படுத்துவதுடன் மூலவள ஒதுக்கீட்டுத் திறனை அதிகரித்து இலங்கையை

அட்டவணை 5.3

**வர்த்தகச் சுட்டெண்கள் (அ)**

1997 = 100

| வகை | 2003 | | | 2004(ஆ) | | | வளர்ச்சி வீதம் (ஆ) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பெறுமதிச் சுட்டெண் | அளவுச் சுட்டெண் | அலகு ஒன்றிற்கான விலைச் சுட்டெண் | பெறுமதிச் சுட்டெண் | அளவுச் சுட்டெண் | அலகு ஒன்றிற்கான விலைச் சுட்டெண் | பெறுமதிச் சுட்டெண் | அளவுச் சுட்டெண் | அலகு ஒன்றிற்கான விலைச் சுட்டெண் |
| **ஏற்றுமதிகள்** | | | | | | | | | |
| **வேளாண்மை ஏற்றுமதிகள்** | **90.8** | **109.6** | **82.9** | **100.3** | **112.9** | **88.8** | **10.4** | **3.1** | **7.1** |
| தேயிலை | 94.8 | 112.0 | 84.6 | 102.5 | 113.8 | 90.1 | 8.1 | 1.6 | 6.4 |
| இறப்பர் | 49.0 | 58.1 | 84.3 | 65.3 | 65.6 | 99.5 | 33.3 | 12.8 | 18.1 |
| தெங்கு | 78.8 | 96.5 | 81.6 | 96.1 | 112.8 | 85.2 | 22.1 | 16.9 | 4.5 |
| ஏனைய வேளாண்மை உற்பத்திகள் | 103.5 | 135.9 | 76.2 | 111.7 | 134.6 | 83.0 | 7.9 | -1.0 | 9.0 |
| **கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **115.5** | **124.1** | **93.1** | **130.9** | **135.4** | **96.7** | **13.3** | **9.1** | **3.8** |
| புடவைகளும் ஆடைகளும் | 113.0 | 118.5 | 95.4 | 123.2 | 127.7 | 96.5 | 9.1 | 7.8 | 1.2 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 67.0 | 45.8 | 146.4 | 102.3 | 59.4 | 172.1 | 52.6 | 29.8 | 17.6 |
| ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் | 125.3 | 143.2 | 87.5 | 149.8 | 158.9 | 94.3 | 19.6 | 11.0 | 7.8 |
| **கனிப்பொருள் ஏற்றுமதிகள்** | **93.6** | **91.5** | **102.4** | **134.2** | **96.1** | **139.7** | **43.4** | **5.1** | **36.5** |
| இரத்தினக்கற்கள் | 94.9 | 92.9 | 102.1 | 130.7 | 96.2 | 135.8 | 37.7 | 3.5 | 33.0 |
| ஏனைய கனிப்பொருள் ஏற்றுமதிகள் | 76.8 | 72.2 | 106.4 | 181.5 | 94.5 | 192.1 | 136.3 | 30.9 | 80.5 |
| மொத்த ஏற்றுமதிகள் | 110.4 | 120.1 | 92.0 | 123.9 | 129.4 | 95.7 | 12.2 | 7.8 | 4.0 |
| **இறக்குமதிகள்** | | | | | | | | | |
| **நுகர்வுப் பொருட்கள்** | **124.0** | **152.4** | **81.4** | **132.9** | **158.4** | **83.9** | **7.2** | **3.9** | **3.2** |
| உணவும் குடிபானமும் | 87.9 | 105.4 | 83.4 | 92.8 | 102.5 | 90.6 | 5.6 | -2.7 | 8.6 |
| ஏனைய நுகர்வுப் பொருட்கள் | 176.4 | 220.7 | 79.9 | 191.1 | 239.5 | 79.8 | 8.3 | 8.5 | -0.2 |
| **இடைநிலைப் பொருட்கள்** | **121.9** | **127.3** | **95.8** | **149.2** | **135.7** | **110.0** | **22.4** | **6.6** | **14.8** |
| வளமாக்கி | 132.0 | 131.6 | 100.3 | 160.7 | 130.4 | 123.2 | 21.7 | -0.9 | 22.8 |
| மசகெண்ணெய் | 163.4 | 110.0 | 148.6 | 229.2 | 121.3 | 189.0 | 40.2 | 10.3 | 27.2 |
| ஏனைய பெற்றோலியம் | 147.4 | 102.5 | 143.8 | 219.3 | 110.3 | 198.9 | 48.8 | 7.6 | 38.3 |
| இரசாயனகூறுகளும் கலவைகளும் | 124.7 | 143.4 | 86.9 | 151.4 | 150.6 | 100.5 | 21.4 | 5.0 | 15.6 |
| கோதுமையும் மெசுலீனும் | 99.5 | 116.3 | 85.6 | 132.9 | 125.8 | 105.6 | 33.5 | 8.2 | 23.4 |
| புடவைகள் (ஆடைகள் உட்பட) | 99.0 | 114.2 | 86.7 | 109.2 | 125.0 | 87.4 | 10.3 | 9.4 | 0.8 |
| பிளாத்திக்கு | 130.0 | 156.0 | 83.3 | 166.2 | 159.0 | 104.5 | 27.9 | 1.9 | 25.5 |
| வைரங்கள் | 163.3 | 139.9 | 116.7 | 163.6 | 125.7 | 130.1 | 0.2 | -10.1 | 11.5 |
| ஏனையவை | 129.0 | 167.1 | 77.2 | 156.0 | 174.4 | 89.4 | 20.9 | 4.4 | 15.8 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | **99.6** | **145.9** | **68.2** | **125.9** | **172.8** | **72.9** | **26.5** | **18.4** | **6.8** |
| கட்டட பொருட்கள் | 120.8 | 145.0 | 83.3 | 147.9 | 169.0 | 87.5 | 22.4 | 16.5 | 5.1 |
| போக்குவரத்துக் கருவிகள் | 99.0 | 82.1 | 120.6 | 123.3 | 93.7 | 131.6 | 24.6 | 14.2 | 9.1 |
| பொறிகளும் கருவிகளும் | 93.9 | 173.1 | 54.2 | 115.3 | 205.5 | 56.1 | 22.9 | 18.7 | 3.5 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 85.5 | 80.7 | 105.8 | 149.5 | 106.2 | 140.8 | 74.9 | 31.5 | 33.0 |
| மொத்த இறக்குமதிகள் | 113.7 | 136.5 | 83.3 | 136.0 | 148.8 | 91.4 | 19.9 | 9.0 | 9.7 |
| வர்த்தக மாற்று வீதம் | | | 110.4 | | | 104.7 | | | -5.2 |

(அ) ஐ.அ.டொலர் நியதிகளில்
(ஆ) தற்காலிகமானவை

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

உயர்ந்ததொரு நீண்டகால பொருளாதார வளர்ச்சிக்கு இட்டுச்செல்லுமென்பதனை கவனித்தல் வேண்டும்.

## 5.3 பொருட்களிலான வர்த்தகமும் வர்த்தக நிலுவையும்

ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகள் இரண்டினதும் அதிகரிப்புடன் 2004 இல் வெளிநாட்டு வர்த்தகம் மேலும் விரிவடைந்தது. 2003 இல் பதிவு செய்யப்பட்ட 9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் ஏற்றுமதி வருமானங்கள் 12 சதவீதத்தினால் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் 5,757 மில்லியனிற்கு வளர்ச்சியடைந்து 2000 ஆம் ஆண்டின் பின்னரான ஆகக்கூடிய செயலாற்றத்தினை அடைந்தது. இறக்குமதிகள் 20 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 8,000 மில்லியன்களுக்கு வளர்ச்சியடைந்து, 2003 இன் 9 சதவீத வளர்ச்சியை விடவும் கணிசமானதொரு அதிகரிப்பினை பதிவு செய்தது. இது வர்த்தக நிலுவை ஐ.அ.டொலர் 704 மில்லியனால் ஐ.அ.டொலர் 2,243 மில்லியனுக்கு விரிவடைய வழிவகுத்தது.

பன்னாட்டுச் சந்தையில் முக்கியமாக தேயிலை, இறப்பர் மற்றும் இரத்தினக்கற்கள் என்பவற்றின் கேள்வி அதிகரித்ததன் பயனாக 2004 இல் ஏற்றுமதிகளின் பெறுமதி அலகுச் சுட்டெண் 4.0 சதவீதத்தினால் அதிகரித்தது. ஆயினும், இறக்குமதி விலை சுட்டெண்ணில் ஏற்பட்ட கணிசமானதொரு அதிகரிப்பு பெற்றோலியம், கட்டடப் பொருட்கள், வளமாக்கி, கோதுமை, சீனி மற்றும் பால் உற்பத்திகள் என்பவற்றின் விலை அதிகரிப்பைப் பிரதிபலித்து வர்த்தக மாற்று விகிதத்தினை 5.2 சதவீதத்தினால் மோசமடையச் செய்தது. மேலும், ஒடுங்கிய ஏற்றுமதித் தளம் மற்றும் ஒரு சில சந்தைகளில் மிகையாகத் தங்கியிருத்தல் என்பன இலங்கையின் ஏற்றுமதிச் செயலாற்றத்தில் குறிப்பிடத்தக்களவான இடர்நேர்வு மூலங்களாக தொடர்ந்தும் இருந்து வருகின்றன.

### ஏற்றுமதிச் செயலாற்றம்

ஏற்றுமதி வருவாய்களில் கைத்தொழில் ஏற்றுமதிகள் 78 சதவீதமான உயர்ந்தளவானதொரு பங்கைக் கொண்டிருந்த அதேவேளை, வேளாண்மை ஏற்றுமதிகள் 19 சதவீதத்திற்கு மட்டும் வகைகூறின. ஆகையால், 2004 இல் ஏற்றுமதி வளர்ச்சிக்கான பங்களிப்பு பெரும்பாலும் கைத்தொழில் துறையிலிருந்து பெறப்பட்டதுடன் இது 85 சதவீத பங்களிப்பைச் செய்தது. வேளாண்மை ஏற்றுமதிகளின் ஒப்பீட்டு ரீதியான எண் தொகை 16 சதவீதமாக இருந்தது.

2004 இல் வேளாண்மை ஏற்றுமதிகள் 10 சதவீதத்தினால் அதிகரித்து தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு ஆகிய மூன்று பிரதான பயிர்களின் உயர்ந்தளவான செயலாற்றத்தைப் பிரதிபலித்தன. 2004 இல் தேயிலை, அதிகரித்த விலைகளினால் பயனடைந்த அதேவேளை, தெங்கு, ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த அளவு வளர்ச்சியைப் பதிவு செய்தது. இறப்பர் ஏற்றுமதிகள் அளவு மற்றும் விலைகள் ஆகியவிரு நியதிகளிலும் பயனடைந்தன. மத்திய கிழக்கு நாடுகள், ருசியா மற்றும் ஏனைய சோவியத் அணி நாடுகளிலிருந்து தாழ்நிலத் தேயிலைக்கு ஏற்பட்ட அதிகரித்ததொரு கேள்வி காரணமாக 2004 இல் தேயிலை விலைகள் கிலோ கிராமொன்றுக்கு 7 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 2.46 இற்கு அதிகரித்தன. 2004 இல் ருசியா மொத்த தேயிலை ஏற்றுமதியில் 19 சதவீதப் பங்குடன் மிகப்பெரிய வாங்குநராக தொடர்ந்துமிருந்ததுடன் அதனைத் தொடர்ந்து ஐக்கிய அரபு எமிரேட்சும் சிரியாவும் காணப்பட்டன. தேயிலை உற்பத்தியின் மிதமான வளர்ச்சியானது தேயிலை ஏற்றுமதிகளை 1 சதவீத மிதமானதொரு அதிகரிப்பிற்கு இட்டுச்சென்றது. இது கென்யாவில் ஏற்பட்ட பெருமளவிலான உற்பத்தி அதிகரிப்பின் உதவியுடன் மிகப்பெரிய தேயிலை ஏற்றுமதியாளராகிய இலங்கையை முந்திச் செல்வதற்கு காரணமாகவிருந்தது. குறைந்த கேள்வி காரணமாக பெறுமதி கூட்டப்பட்ட தேயிலை ஏற்றுமதிகள், பொதியிடப்பட்ட தேயிலை மற்றும் பச்சைத் தேயிலை என்பவற்றின் ஏற்றுமதி பங்குகள் வீழ்ச்சியடைந்தன. மத்திய கிழக்கு நாடுகள், சேர்மனி மற்றும் சீனா ஆகிய நாடுகளிலிருந்தான அதிகரித்த கேள்வியின் காரணமாக தேங்காய்த்துருவல் மற்றும் உற்பத்திகள் என்பவற்றின் ஏற்றுமதிகள் உயர்வடைந்ததன் காரணமாக தெங்கிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 2004 இல் 22 சதவீதத்தினால் அதிகரித்தன. தெங்குக் கைத்தொழிலுக்கு உதவியளிக்கும் விதத்தில் இறக்குமதி செய்யப்பட்ட சமையல் எண்ணெய் மீது 2005 சனவரியிலிருந்து சிறப்பு வரியொன்று விதிக்கப்பட்டது. 2002 யூலையிலிருந்து தொடர்ச்சியான விலை அதிகரிப்பினால் பெறப்பட்ட நன்மை காரணமாக, 2004 இல் இறப்பர் ஏற்றுமதி 33 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. தயாரிப்புத் துறையிலான உள்நாட்டு நுகர்விற்கான கேள்வியானது ஏற்றுமதிகளுக்கான இறப்பரின் அளவைக் குறைத்ததுடன் இதனால் பதனிடப்படாத இறப்பர் ஏற்றுமதிகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் பாதிக்கப்பட்டன. கைத்தொழில் உள்ளீடாக இறப்பருக்கான உள்நாட்டுக் கேள்வியை ஈடு செய்வதற்காக, 2004 இல் 14,256 மெற்றிக் தொன் இயற்கை இறப்பர் இறக்குமதி செய்யப்பட்டது.

சிறிய வேளாண்மை ஏற்றுமதிகள் 2003 இன் 10 சதவீத வீழ்ச்சிக்கு மாறாக 2004 இல் 8 சதவீதத்தினால் அதிகரித்தன. கராம்பு, மரக்கறிகள், கறுவா மற்றும் தயாரிக்கப்படாத புகையிலை என்பனவற்றின் உயர்ந்த ஏற்றுமதிகள் இவ்வளர்ச்சிக்கு முக்கியமாக உதவின.

அட்டவணை 5.4
**ஏற்றுமதிகளின் அமைப்பு**

ஐ.அ.டொலர் மில்லியன்

| வகை | 2003 | | 2004 (அ) | | பெறுமதியில் மாற்றம் (அ) | வளர்ச்சி வீதம் (அ) | வளர்ச்சிக் கான பங்களிப்பு (அ) |
|---|---|---|---|---|---|---|---|
| | பெறுமதி | பங்கு | பெறுமதி | பங்கு | | | |
| **வேளாண்மை ஏற்றுமதிகள்** | **965** | **19** | **1,065** | **19** | **100** | **10.4** | **16.0** |
| தேயிலை | 683 | 13 | 739 | 13 | 56 | 8.2 | 8.9 |
| இறப்பர் | 39 | 1 | 51 | 1 | 12 | 30.8 | 1.9 |
| தெங்கு | 93 | 2 | 113 | 2 | 20 | 21.5 | 3.2 |
| உள்ளீட்டு உற்பத்திகள் | 48 | 1 | 59 | 1 | 11 | 22.9 | 1.8 |
| ஏனையவை | 45 | 1 | 54 | 1 | 9 | 20.0 | 1.4 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 150 | 3 | 162 | 3 | 12 | 8.0 | 1.9 |
| **கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **3,977** | **77** | **4,506** | **78** | **529** | **13.3** | **84.8** |
| உணவு, குடிபானம், புகையிலை | 145 | 3 | 175 | 3 | 30 | 20.7 | 4.8 |
| புடவைகளும் ஆடைகளும் | 2,575 | 50 | 2,809 | 49 | 234 | 9.1 | 37.5 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 65 | 1 | 100 | 1 | 35 | 53.8 | 5.6 |
| இறப்பர் உற்பத்திகள் | 231 | 5 | 283 | 5 | 52 | 22.5 | 8.3 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 42 | 1 | 47 | 1 | 5 | 11.9 | 0.8 |
| தோல், பயணப்பொருட்கள், காலணியும் | 58 | 1 | 43 | 0 | -15 | -25.9 | -2.4 |
| பொறிகளும் கருவிகளும் | 290 | 6 | 386 | 7 | 96 | 33.1 | 15.4 |
| வைரங்களும் ஆபரணங்களும் (ஆ) | 233 | 5 | 265 | 5 | 33 | 13.7 | 5.1 |
| ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் | 337 | 7 | 398 | 7 | 61 | 18.1 | 9.6 |
| **கனிப்பொருள் ஏற்றுமதிகள்** | **84** | **2** | **120** | **2** | **36** | **42.9** | **5.8** |
| இரத்தினக் கற்கள் | 79 | 2 | 109 | 2 | 30 | 38.0 | 4.8 |
| ஏனைய கனிப்பொருள் ஏற்றுமதிகள் | 5 | 0 | 11 | 0 | 6 | 120.0 | 1.0 |
| **பாகுபடுத்தப்படாதவை (இ)** | **108** | **2** | **66** | **1** | **-42** | **-38.9** | **-6.7** |
| **மொத்த ஏற்றுமதிகள் (ஈ)** | **5,133** | **100** | **5,757** | **100** | **624** | **12.2** | **100.0** |
| ஆண்டுச்சராசரிச் செலாவணி வீதம் | 96.52 | | 101.19 | | | | |


(அ) தற்காலிகமானவை.
(ஆ) சுங்கத்தினால் 1999இலிருந்து பதிவு செய்யப்பட்ட வைரங்களின் ஏற்றுமதிகள், தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகார சபைகளிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளால் சீராக்கஞ் செய்யப்பட்டது.
(இ) மீன் ஏற்றுமதிகள் உட்பட.
(ஈ) சீராக்கப்பட்டது.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்.
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.
மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள்
இலங்கை மத்திய வங்கி.
தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபை

இலங்கை இந்திய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இந்திய சந்தைக்குள் தீர்வையற்று நுழைந்தமை மற்றும் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்தான மரக்கறி களுக்கான உறுதியான கேள்வி என்பன மூலம் இத்துறை நன்மையடைந்துள்ளது. 2004 இல் உலர்ந்த மற்றும் உடன் பழங்கள், வெற்றிலை மற்றும் கோப்பி என்பவற் றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் அதிகரித்த வேளையில், அத்தியாவசிய எண்ணெய்கள், பாக்குகள், மரமுந்திரிகைப் பருப்புக்கள் மற்றும் கொக்கோ உற்பத்திகள் என்பவற்றின் ஏற்றுமதி வருவாய்கள் வீழ்ச்சியடைந்தன.

புடவைகள் மற்றும் ஆடைகள், பொறி மற்றும் உபகரணம் மற்றும் இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள் என்பவற்றால் அடையப்பெற்ற உறுதியான செயலாற்றம் மூலம் கைத்தொழில் ஏற்றுமதிகள் 13 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தன. வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் ஊடாக இத்துறைக்கு கிடைத்த அதிகரித்த சந்தை நுழைவுகள் இவ் அதிகரிப்பிற்கு உதவியளித்தன. பல்நூலிழை உடன்படிக்கை கட்டம் கட்டமாக அகற்றப்பட்டதை தொடர்ந்து இலங்கை கடும் போட்டியினை எதிர்கொள்ளத் தொடங்கியதற்கு மத்தியிலும், புடவைகள் மற்றும் ஆடைகளின் ஏற்றுமதிகள், மொத்த ஏற்றுமதிகளில் 49 சதவீதத்திற்கும் மற்றும் கைத்தொழில் ஏற்றுமதிகளில் 62 சதவீதத்திற்கும் வகைகூறி, 2004 இல் 9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. 2004 இல் ஆடைகளின் ஏற்றுமதி அளவு 8 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில், ஏற்றுமதி விலைகள் 1 சதவீதத்தினால் அதிகரித்தன. ஐரோப்பிய ஒன்றியத்தில் சந்தைப்பங்கை விரிவுபடுத்துவதன் மூலம் ஐக்கிய அமெரிக்கச் சந்தையில் பெருமளவு தங்கியிருப்பதி லிருந்து எழக்கூடிய இடர்நேர்வுகளை ஆடைக் கைத்தொழில் குறைத்துக் கொள்ளக் கூடியதாகவிருந்தது. பொதுவாக்கப்பட்ட முன்னுரிமை முறைமையின் கீழ் 2004 பெப்புருவரியிலிருந்து ஐரோப்பிய ஒன்றியத்து டனான சிறப்பு ஊக்குவிப்பு ஏற்பாட்டின் மூலம்

வரைபடம் 5.3
**முக்கிய வகைகளின் ஏற்றுமதிகளின் பங்கு**





*ஐரோப்பிய ஒன்றியச் சந்தைக்கான ஆடை ஏற்றுமதிகள் நன்மையடைந்தன. தோல், பயணப் பொருட்கள் மற்றும் காலணி தவிர்ந்த மற்றைய துணைத் கைத்தொழில் துறைகள் 2004 இல் தொடர்ந்து வளர்ச்சியடைந்தன. 2002இல் பாதிப்புக்குள்ளான. ஆபரணத்துறை பெல்ஜியம், இஸ்ரேல், வியட்நாம், ஐக்கிய அமெரிக்கா மற்றும் யப்பான் போன்ற பிரதான வர்த்தக மையங்களிலிருந்தான உயர்ந்த கேள்விக்கு இசைந்து விரைவாக மீட்சியடைந்தது. தங்கம், வெள்ளி, வைரம், முத்து மற்றும் இரத்தினக்கல் போன்ற மூலப்பொருட்களின் இறக்குமதிகளுக்கு பெறுமதி கூட்டப்பட்ட வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டதனால் ஆபரண உற்பத்தியாளர்கள் நன்மையடைந்தனர்.*

*கனிப்பொருள் ஏற்றுமதிகளில் 90 சதவீதத்திற்கு வகைகூறிய இரத்தினக்கற்களின் உயர் ஏற்றுமதி காரணமாக கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள், 2003 இல் வீழ்ச்சியடைந்தமைக்கு மாறாக, 2004 இல் 43 சதவீதத்தினால் அதிகரித்தன. 2003 இல் இரத்தினக் கற்களின் வியாபாரத்தில் காணப்பட்ட தீர்க்கப்படாத பிரச்சனைகளால் மிகவும் பாதிப்படைந்திருந்த இரத்தினக்கல் ஏற்றுமதிகள் சந்தையை மீண்டும் பெற்று, 2004 இல் 38 சதவீதமான உறுதியான வளர்ச்சியைப் பதிவு செய்தன. இலங்கை தொடர்ந்தும் உலகச் சந்தைக்கான உயர்தர நீல மாணிக்கக்கற்களின் மிகப்பெரிய வழங்குநராகவிருந்தது. 2004இல் ஐக்கிய அமெரிக்கா தொடர்ந்தும் இலங்கையின் மாணிக்கக்கற்களின் மிகப்பெரிய வாங்குநராக இருந்தது. இதற்கு அடுத்தபடியாக யப்பானும், தாய்லாந்தும் காணப்பட்டன. நவீன தேர்ச்சி, வெட்டி, பட்டை தீட்டப்பட்ட இரத்தினக்கற்கள் வடிவிலான போதுமான மூலப்பொருட்கள் என்பவற்றின் உதவியுடன் புதுமையான வடிவமைப்புக்களை இலங்கை உற்பத்தி செய்யுமாயின் ஆபரணங்களின் ஏற்றுமதி வருவாய்களை அதிகரிப்பதற்கான பெருமளவு வாய்ப்புக்களைப் பெறக்கூடியதாயிருக்கும்.*

## இறக்குமதிச் செயலாற்றம்

*இறக்குமதிகள், 2003 இன் 9 சதவீதமான வளர்ச்சிக்கு மாறாக, 2004 இல் ஐ.அ.டொலர்கள் 8,000 மில்லியன்களுக்கு 20 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து பொருளாதார விரிவாக்கம், நீண்ட கால வரட்சி மற்றும் எண்ணெய் விலைகளின் உயர்வு மற்றும் குறைந்த வட்டிவீத அமைப்பு என்பவற்றின் தாக்கத்தைப் பிரதிபலித்தன. பொருளாதார விரிவாக்கம் முதலீட்டு மற்றும் இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகளை அதிகரித்தவேளையில், வரட்சி நிலைமைகள் உணவுப் பொருட்களினதும் பெற்றோலிய உற்பத்திகளினதும் இறக்குமதிகள் உயர்வடைவதற்கு வழியமைத்தன.*

வரைபடம் 5.4
**முக்கிய வகைகளின் படி இறக்குமதிகளின் பங்கு**



1977 இல் பொருளாதாரம் தாராளமய மாக்கப்பட்டதனைத் தொடர்ந்துவந்த பல ஆண்டுகளில், ஒப்பீட்டு ரீதியில் இறக்குமதிகள் தொடர்பான பங்கு நுகர்வுப் பொருட்களிலிருந்து இடைநிலை மற்றும் முதலீட்டுப் பொருட்களிற்குப் படிப்படியாக மாறியிருக்கிறது. 2004 இல் நுகர்வுப் பொருட்களின் பங்கு 20 சதவீதத்திற்கு மேலும் வீழ்ச்சியடைந்தவேளையில் இடைநிலைப் பொருட்கள் மற்றும் முதலீட்டுப் பொருட்கள் இறக்குமதிகளின் பங்கு முறையே 58 சதவீதத்திற்கும் 21 சதவீதத்திற்கும் அதிகரித்தது.

2004 இல் நுகர்வுப் பொருட்கள் மீதான செலவினம் ஐ.அ.டொலர்கள் 1,623 மில்லியன்களுக்கு 10 சதவீதத்தினால் அதிகரித்தது. குறைந்த உள்நாட்டு உற்பத்தியைத் தொடர்ந்து பிரதான உணவான அரிசிக்கான சந்தை நிரம்பலை பேணுவதற்காகவும் மற்றும் 2004 செத்தெம்பரிலிருந்து அரிசி இறக்குமதி மீதான கிலோ கிராம் ஒன்றிற்கான ரூ.9 கொண்ட தீர்வை நீக்கப்பட்டதன் பிரதிபலிப்பாகவும். அரிசி இறக்குமதிகள் அதிகரித்தன. சிறிதளவு வீழ்ச்சியைப் பதிவு செய்த மோட்டார் வாகன இறக்குமதிகள் தவிர, சகல வகையான முக்கிய நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகள் அனைத்தும் அதிகரித்துக் காணப்பட்டன. 2003 இன் முதல் மூன்று காலாண்டுப் பகுதியுடன் ஒப்பிடுகையில், 2004 இன் அதேகாலப் பகுதியில் உந்து ஊர்திகளின் இறக்குமதிகள் 12 சதவீதத்தினால் அதிகரித்தன. ஆயினும், உற்பத்தி வரி அதிகரித்தமை மற்றும் 2004 ஒத்தோபர் 22 இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் நாணயக் கடிதங்களைப் பெறுவதற்கு குறைந்த பட்சமாக 100 சதவீத காசினை வைப்பிலிட வேண்டிய தேவை அறிமுகப்படுத்தப்பட்டமை என்பனவற்றின் காரணமாக தனிப்பட்ட பாவனைக்கான உந்து ஊர்திகளின் இறக்குமதிகள் 2004 இன் இறுதிக் காலாண்டில் கணிசமாக வீழ்ச்சியடைந்தன.

பெரும்பாலும் புடவைகள் மற்றும் பெற்றோலியம் ஆகியவற்றை உள்ளடக்கிய இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகள் 22 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. மசகு எண்ணெய்யின் சராசரி விலை 2003 இன் பீப்பாய் ஒன்றிற்கு ஐ.அ.டொலர்கள் 29.46 இலிருந்து 2004 இல்

அட்டவணை 5.5

**இறக்குமதிகளின் முடிவுப் பயன்பாட்டுப் பகுப்பு**

ஐ.அ.டொலர் மில்லியன்

| வகை | 2003 பெறுமதி | 2003 பங்கு | 2004(அ) பெறுமதி | 2004(அ) பங்கு | பெறுமதியில் மாற்றம் (அ) | வளர்ச்சி வீதம் (அ) 2004/2003 | வளர்ச்சிக்கான பங்களிப்பு (அ) |
|---|---|---|---|---|---|---|---|
| **நுகர்வுப் பொருட்கள்** | **1,481** | **22** | **1,623** | **20** | **142** | **9.6** | **10.7** |
| உணவும் குடிபானமும் | 701 | 11 | 779 | 9 | 78 | 11.1 | 5.8 |
| அரிசி | 8 | 0 | 59 | 1 | 51 | 638.0 | 3.8 |
| சீனி | 116 | 2 | 110 | 1 | -6 | -6.0 | -0.5 |
| கோதுமை | 137 | 2 | 183 | 2 | 46 | 34.0 | 3.5 |
| ஏனையவை | 440 | 7 | 427 | 5 | -13 | -2.9 | -1.0 |
| ஏனைய நுகர்வுப் பொருட்கள் | 780 | 11 | 844 | 11 | 64 | 8.3 | 4.9 |
| **இடைநிலைப் பொருட்கள்** | **3,811** | **57** | **4,645** | **58** | **834** | **21.9** | **62.8** |
| பெற்றோலியம் | 838 | 13 | 1,209 | 15 | 371 | 44.3 | 28.0 |
| வளமாக்கி | 88 | 1 | 107 | 1 | 19 | 21.6 | 1.5 |
| இரசாயனங்கள் | 170 | 3 | 206 | 3 | 36 | 21.2 | 2.7 |
| புடவைகளும் ஆடைகளும் | 1,372 | 21 | 1,514 | 19 | 142 | 10.3 | 10.7 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 1,343 | 20 | 1,609 | 20 | 266 | 19.8 | 20.0 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | **1,320** | **20** | **1,670** | **21** | **350** | **27.0** | **26.3** |
| பொறியும் கருவியும் | 698 | 11 | 857 | 11 | 159 | 22.8 | 12.0 |
| போக்குவரத்துக் கருவி | 206 | 3 | 257 | 3 | 51 | 24.8 | 3.8 |
| கட்டடப் பொருட்கள் | 328 | 5 | 402 | 5 | 74 | 23.0 | 5.5 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 88 | 1 | 154 | 2 | 66 | 75.1 | 5.0 |
| **பகுக்கப்படாத இறக்குமதிகள்** | **60** | **1** | **61** | **1** | **-1** | **1.7** | **0.1** |
| மொத்த இறக்குமதிகள் (ஆ) | 6,672 | 100 | 8,000 | 100 | 1,327 | 19.9 | 100.0 |
| ஆண்டுக்கான சராசரி செலாவணி வீதம் | 96.52 | | 101.19 | | | | |

(அ) தற்காலிகமானவை.
(ஆ) சீராக்கப்பட்டது.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்.
கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம்.
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.
முக்கிய வைரக்கல் இறக்குமதியாளர்கள்.
இலங்கை மத்திய வங்கி.
வரையறுக்கப்பட்ட பிறிமா இலங்கை

அட்டவணை 5.6

**முக்கிய இறக்குமதிகளின் அளவுகள் (அ)**

'000 மெற்றிக் தொன்

| விடயம் | 2000 | 2001 | 2002 | 2003 | 2004 (ஆ) |
|---|---|---|---|---|---|
| *அரிசி* | **15** | **52** | **95** | **35** | **222** |
| *1ஆம் காலாண்டு* | 7 | 3 | 51 | 22 | 9 |
| *2ஆம் காலாண்டு* | 7 | 7 | 9 | 9 | 9 |
| *3ஆம் காலாண்டு* | ... | 2 | 10 | 2 | 4 |
| *4ஆம் காலாண்டு* | 1 | 40 | 25 | 2 | 200 |
| **கோதுமை** | **922** | **760** | **993** | **919** | **993** |
| *1ஆம் காலாண்டு* | 266 | 231 | 309 | 262 | 257 |
| *2ஆம் காலாண்டு* | 210 | 229 | 215 | 232 | 218 |
| *3ஆம் காலாண்டு* | 247 | 177 | 221 | 217 | 189 |
| *4ஆம் காலாண்டு* | 199 | 123 | 248 | 208 | 329 |
| ***சீனி*** | 562 | 420 | 554 | 509 | 438 |
| *1ஆம் காலாண்டு* | 128 | 100 | 146 | 151 | 98 |
| *2ஆம் காலாண்டு* | 185 | 127 | 141 | 135 | 173 |
| *3ஆம் காலாண்டு* | 85 | 109 | 110 | 104 | 71 |
| *4ஆம் காலாண்டு* | 164 | 84 | 157 | 119 | 96 |
| **பெற்றோலியம் (மசகெண்ணெய்)** | **2,347** | **1,954** | **2,300** | **1,995** | **2,200** |
| *1ஆம் காலாண்டு* | 608 | 237 | 539 | 382 | 586 |
| *2ஆம் காலாண்டு* | 583 | 539 | 513 | 466 | 464 |
| *3ஆம் காலாண்டு* | 613 | 624 | 593 | 500 | 634 |
| *4ஆம் காலாண்டு* | 543 | 554 | 655 | 647 | 516 |
| **தூய்மையாக்கப்பட்ட பெற்றோலியம்** | **1,257** | **1,420** | **1,348** | **1,168** | **1,259** |
| *1ஆம் காலாண்டு* | 327 | 537 | 276 | 340 | 399 |
| *2ஆம் காலாண்டு* | 293 | 419 | 426 | 239 | 323 |
| *3ஆம் காலாண்டு* | 321 | 224 | 266 | 317 | 275 |
| *4ஆம் காலாண்டு* | 316 | 240 | 380 | 272 | 262 |
| **புடவையும் ஆடையும்** | **239** | **234** | **244** | **253** | **257** |
| *1ஆம் காலாண்டு* | 61 | 60 | 57 | 61 | 58 |
| *2ஆம் காலாண்டு* | 63 | 63 | 65 | 65 | 66 |
| *3ஆம் காலாண்டு* | 57 | 52 | 61 | 58 | 66 |
| *4ஆம் காலாண்டு* | 58 | 59 | 61 | 68 | 66 |
| **வளமாக்கி** | **559** | **460** | **537** | **514** | **510** |
| *1ஆம் காலாண்டு* | 149 | 66 | 103 | 124 | 54 |
| *2ஆம் காலாண்டு* | 102 | 183 | 163 | 166 | 164 |
| *3ஆம் காலாண்டு* | 174 | 83 | 138 | 49 | 76 |
| *4ஆம் காலாண்டு* | 134 | 128 | 133 | 175 | 216 |

(அ) சீராக்கப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்.
கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம்.
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.
வரையறுக்கப்பட்ட பிறிமா இலங்கை

பீப்பாய் ஒன்றிற்கான ஐ.அ.டொலர்கள் 37.48 ஆக அதிகரித்து இறக்குமதிகளின் பெறுமதியில் ஏற்பட்ட உயர் வளர்ச்சிக்கு வழிவகுத்தது. மசகு எண்ணெய்யின் இறக்குமதி அளவு சுத்திகரிப்பு இயலளவினால் வரையறுக்கப்பட்டுக் காணப்படுகிறது. ஆகையால், பெற்றோலிய உற்பத்திகளின் அதிகரித்த கேள்வியை ஈடுசெய்வதற்காக, அதிகளவான சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள் இறக்குமதி செய்யப்பட்டன. புடவைகள் மற்றும் ஆடைகளின் ஏற்றுமதியிலான கணிசமான அதிகரிப்பு உயர்ந்தளவிலான மூலப்பொருட்களின் இறக்குமதிகளைத் தேவைப்படுத்தின. ஏனைய இடைநிலைப் பொருட்களான தாள், இரசாயனப் பொருட்கள், ஆபரணம், வெதுப்பகம் மற்றும் இறப்பரை அடிப்படையாகக் கொண்ட தயாரிப்புக் கைத்தொழில்கள் என்பவற்றிற்கான இறக்குமதிகள் 15 சதவீதத்தினால் அதிகரித்தன.


பொருளாதார விரிவாக்கம் மற்றும் குறைந்த வட்டிவீத அமைப்பு என்பவற்றால் பயனடைந்து முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள், குறிப்பாக, கட்டடப் பொருட்கள், போக்குவரத்து சாதனங்கள் மற்றும் பொறிகளும் கருவிகளும் என்பன 2004 இல் 27 சதவீதத்தினால் அதிகரித்தன. பொறிகள் மற்றும் கருவிகள், மின்னுருவாக்கிகள், கடத்திக் கருவிகள், தரவு செய்முறைப்படுத்தல் எந்திரங்கள், தொலைத்தொடர்பு சாதனங்கள் மற்றும் தையல் இயந்திரங்கள் போன்றவற்றினை உள்ளடக்கிய இறக்குமதி வகையில் அரைப்பங்கிற்கும் மேலாக வகைகூறும் முதலீட்டுப் பொருட்களிலான பாரிய வகையான பொறிகளும் கருவிகளும் 2004 இல் 23 சதவீதத்தினால் அதிகரித்தன. வளர்ச்சியடைந்து வரும் தொலைத் தொடர்புத் துறையானது நவீன தொலைத் தொடர்புக் கருவிகள் மற்றும் ஊடுகடத்திக் கருவிகள் என்பவற்றின் இறக்குமதிக்கான கேள்வியைத் தூண்டின. சொத்து அபிவிருத்தியிலான இலங்கை முதலீட்டுச் சபையின் கீழான பெரும் எண்ணிக்கையான செயற்றிட்டங்கள், புதுப்பித்தல்கள் மற்றும் உல்லாசப் பயணிகளின் வருகையிலேற்பட்ட செழிப்புடன் சுற்றுலா விடுதிகள் புதுப்பிக்கப்பட்டமை, விரிவாக்கப்பட்டமை அல்லது தரமுயர்த்தப்பட்டமை மற்றும் வீடமைப்பு நிருமாணத்திலான விரிவாக்கம் என்பனவற்றுடன் தொடர்புடைய கட்டடப் பொருட்கள் இறக்குமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பே, கட்டடப் பொருட்களின் வளர்ச்சிக்குப் பகுதியளவுக் காரணமாக அமைந்தது.

## வர்த்தகத்தின் போக்கு


2004 இல் வர்த்தகத்தின் போக்கு பெரும்பாலும் மாற்றமின்றியிருந்தது. இலங்கை ஏற்றுமதிகளின் முக்கிய சேரிடங்களாக ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய நாடுகளை முதன்மையாகக் கொண்ட கைத்தொழில் நாடுகளே தொடர்ந்தும் காணப்பட்டன. 1979 இலிருந்து ஐக்கிய அமெரிக்கா இலங்கையின் ஏற்றுமதிகளுக்கான மிகப்பெரும் தனியொரு வாங்குநராக விளங்கி வருவதுடன், புடவைகள் மற்றும் ஆடைகள் ஏற்றுமதிகளிலான 58 சதவீதப் பங்குடன் இலங்கையின் ஆடைகள் மற்றும் புடவைகளுக்கான முக்கியமானதொரு சந்தையாக தொடர்ந்தும் காணப்படுகிறது. ஆயினும், முக்கியமாக ஏனைய நாடுகளுடனான வர்த்தக விரிவாக்கம் காரணமாக, ஐக்கிய அமெரிக்காவுக்கான ஏற்றுமதிப் பங்கு 2003 இன் 35 சதவீதத்திலிருந்து 2004 இல் 32

வரைபடம் 5.5
**வர்த்தகத்தின் போக்கு**

**நாடுகளின்படி ஏற்றுமதிகள்**




**நாடுகளின்படி இறக்குமதிகள்**




சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளது. ஓரளவு உயர்ந்த தீர்வைகள், ஏனைய பல அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு முன்னுரிமைச் சலுகை வழங்கப்பட்டமை மற்றும் ஏனைய புடவைகள் ஏற்றுமதி நாடுகளிடமிருந்தான அதிகரித்த போட்டி என்பன ஐக்கிய அமெரிக்காவுக்கான ஏற்றுமதிப் பங்கு குறைவடைந்தமைக்குக் காரணமாகவிருந்தன. இலங்கை உற்பத்திகளுக்கு ஐக்கிய அமெரிக்காவில் பிரயோகிக்கப்படும் தீர்வை விகிதம் 0 சதவீதத்திற்கும் 28 சதவீதத்திற்குமிடையில் காணப்பட்டது. ஆகையால் வர்த்தக மற்றும் முதலீட்டு கட்டமைப்பு உடன்படிக்கையை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையொன்றாக மாற்றியமைப்பதற்காக இலங்கை ஐக்கிய அமெரிக்காவுடன் தொடர்ந்தும் பேச்சுவார்த்தையை நடத்தி வருகிறது.

இலங்கையின் மொத்த ஏற்றுமதிகளில் 14 சதவீதமான பங்குடன் ஐக்கிய இராச்சியம் இரண்டாவது மிகப்பெரிய சேரிடமாக விளங்குகிறது. மொத்தப் புடவைகள் மற்றும் ஆடைகள் ஏற்றுமதிகளில், ஐக்கிய இராச்சியத்திற்கான மிகப்பெரிய ஏற்றுமதி விடயமான புடவைகள் மற்றும் ஆடைகள் 23 சதவீதத்திற்கு வகை கூறின. தேயிலை மற்றும் இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளுக்கும் பிரதான சந்தையாக ஐக்கிய இராச்சியம் காணப்பட்டது.

இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் வழங்கப்பபட்ட சலுகைகளின் பயனாக 2004 இல் இந்தியாவுடனான வர்த்தகம் பெருமளவில் அதிகரித்தது. 2000 இல் இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதிலிருந்து, இந்தியாவிற்கான ஏற்றுமதிகளின் பங்கு அதிகரித்துக் செல்கின்கிறது. இது 2003 இல் பதிவு செய்யப்பட்ட 5 சதவீத பங்கிலிருந்து 2004 இல் 7 சதவீத பங்களவிற்கு அதிகரித்துள்ளது. சுத்திகரிக்கப்பட்ட செம்பு, மின்கடத்தி, கழிவு மற்றும் உருக்கு உலோகம் கராம்பு, தேங்காய்த்துருவல் மற்றும் காப்பிடப்பட்ட கம்பி என்பன இந்தியாவிற்கான சில முக்கிய ஏற்றுமதிகளாக காணப்பட்டன.

இத்தாலி, சேர்மனி, பெல்ஜியம், லக்சம்பேர்க், யப்பான், ருசியா மற்றும் சிங்கப்பூர் என்பன இலங்கை ஏற்றுமதிகளுக்கான மற்றைய முக்கிய சேரிடங்களாக விருந்தன. தேயிலை, கெட்டியான ரயர்கள், கையுறைகள் மற்றும் தென்னந்தும்பு உற்பத்திகள் என்பன சேர்மனிக்கான பிரதான ஏற்றுமதிகளாகவிருந்தன. வைரங்கள் மற்றும் ஆடைகள் என்பன பெல்ஜியம் லக்சம்பேர்க்கிற்கான பிரதான ஏற்றுமதிகளாகவிருந்தன. மேற்குலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட ஏனைய முக்கிய பொருட்களாக விலையுயர்ந்த கற்கள், கையுறைகள், ரயர்கள், தெங்கு துணை உற்பத்திகள், இறால் மற்றும் மீன் உற்பத்திகள் மற்றும் சிலைகள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் என்பன விளங்கின. அதேவேளை, உறைய வைக்கப்பட்ட இறால்களின் குறைந்தளவான ஏற்றுமதி காரணமாக யப்பானுக்கான ஏற்றுமதிகள் குறைவடைந்தன. பக்டீரியா நோய்த்தாக்கம் மற்றும் திறமையற்ற நிர்வாகம் காரணமாக இறால் பண்ணைக் கைத்தொழில் உற்பத்தி தொடர்ந்து வீழ்ச்சியடைந்தது.

ஒரு தொகுதியாக நோக்குகையில் ஆசிய நாடுகள் இறக்குமதிகளுக்கான பிரதான மூலமாக தொடர்ந்தும் காணப்பட்டன. அவற்றின் சந்தைப் பங்கு 2002 இன் 53 சதவீதத்திலிருந்து 2003 இல் 56 சதவீதத்திற்கும் மற்றும் 2004 இல் இந்நாடுகளிலிருந்தான இறக்குமதிகள் 21 சதவீதத்தினால் அதிகரித்தமையினால் 2004 இல் 57 சதவீதத்திற்கும் அதிகரித்தன. பிராந்திய ஒத்துழைப்பிற்கான தெற்காசிய கூட்டமைப்பிலுள்ள நாடுகள் 2004 இன் மொத்த ஏற்றுமதிகளில் 9

சதவீதத்திற்கும், மொத்த இறக்குமதிகளில் 20 சதவீதத்திற்கும் வகைகூறின. 2004 இல், ஐரோப்பிய ஒன்றியம் மொத்த இறக்குமதிகளில் 15 சதவீதத்திற்கு வகைகூறியது.

இந்தியா இறக்குமதிகளுக்கான மிகப்பெரிய (18 சதவீதம்) மூலமாகவும், அதனைத் தொடர்ந்து கொங்கொங் உள்ளடங்கிய சீனா (14 சதவீதம்), சிங்கப்பூர் (9.9 சதவீதம்), மற்றும் ஈரான் (5 சதவீதம்) என்பனவும் காணப்பட்டன. இந்தியாவிலிருந்தான இறக்குமதிகள் 2004 இல் 34 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் அவை முக்கியமாக மருந்தாக்கற் பொருட்கள், கோதுமை, அரிசி, போக்குவரத்து ஊர்திகள் மற்றும் பருத்தி நூல் ஆகிய வற்றைக் கொண்டதாக விளங்கின. இந்தியாவுடனான வர்த்தகப் பற்றாக்குறை 2003 இன் ஐ.அ.டொலர்கள் 828 மில்லியனிலிருந்து 2004 இல் ஐ.அ.டொலர்கள் 1,048 மில்லியன்களுக்கு அதிகரித்திருந்தது. பாகித்தானுடனான இலங்கையின் வர்த்தகமும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவில அதிகரித்தபோதும் பெறுமான அடிப்படையில், மொத்த ஏற்றுமதிகள் மற்றும் மொத்த இறக்குமதிகள் இரண்டும் மிகச் சிறியளவில் தலா 1 சதவீதத்தினையே பதிவு செய்தன.

அட்டவணை 5.7

**தேறிய பணிகளும் வருமானமும் மாற்றல்களும் (அ)**

| விடயம் | ஐ.அ.டொ.மில்லியன் | | ரூபா மில்லியன் | |
|---|---|---|---|---|
| | 2003 | 2004 (ஆ) | 2003 | 2004 (ஆ) |
| 1.போக்குவரத்து | 201 | 209 | 19,423 | 21,201 |
| 2.பயணம் | 162 | 217 | 15,628 | 22,232 |
| 3.தொடர்பூட்டல் பணிகள் | 45 | 33 | 4,380 | 3,304 |
| 4.கணனி தகவல் தொழில் நுட்பப் பணிகள் | 65 | 72 | 6,274 | 7,286 |
| 5.கட்டடவாக்கப் பணிகள் | 34 | 20 | 3,329 | 2,012 |
| 6.காப்புறுதிப் பணிகள் | 19 | 20 | 1,827 | 2,024 |
| 7.ஏனைய வியாபாரப்பணிகள் | -117 | -137 | -11,292 | -13,798 |
| 8.அரச செலவினம் வே.எ.கு. | -11 | -15 | -1,126 | -1,527 |
| மொத்தப் பணிகள் | 399 | 419 | 38,443 | 42,735 |
| 1.ஊழியர்களின் இழப்பீடு | -5 | -6 | -530 | -601 |
| 2.நேரடி முதலீடு | -89 | -92 | -8,612 | -9,303 |
| 3. வட்டியும் ஏனைய கட்டணங்களும் | -77 | -106 | -7,393 | -10,784 |
| மொத்த வருமானம் | -172 | -204 | -16,535 | -20,688 |
| 1. தனியார் | 1,205 | 1,350 | 116,350 | 136,672 |
| 2. பொது அரசு | 36 | 30 | 3,441 | 3,038 |
| மொத்த நடைமுறை மாற்றல்கள் | 1,241 | 1,380 | 119,790 | 139,710 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) இவ்விளக்கம் ப.நா.நிதியத்தின் சென்மதி நிலுவை கையேட்டின் 5ம் பதிப்புடன் (1993) சாத்தியமானஅளவுக்கு இணங்கிச் செல்கின்றது.

(ஆ) தற்காலிகம்

## 5.4 பணிகளிலான வர்த்தகம், வருமானம், மாற்றல்கள் மற்றும் நடைமுறைக் கணக்கு நிலுவை

பணிகளிலான வர்த்தகத்திலுள்ள முக்கிய விடயங்களாக போக்குவரத்து, பயண மற்றும் வியாபாரப் பணிகள் என்பன காணப்பட்டவேளையில் தகவல் தொழில்நுட்பம், தொலைத்தொடர்பூட்டல், கட்டடவாக்கம் மற்றும் காப்புறுதிப் பணிகள் என்பனவும் முக்கிய துறைகளாக தோற்றம் பெற்றுள்ளன. 2004 இல் பணிகள் கணக்கின் மிகை ஐ.அ.டொலர் 419 மில்லியனுக்கு ஏறத்தாழ 5 சதவீதத்தினால் அதிகரித்தது.

### போக்குவரத்துப் பணிகளிலான வர்த்தகம்

2004 இல் பயணிகள் கட்டணம், சரக்குக் கட்டணங்கள் மற்றும் துறைமுகத்துடன் தொடர்பான வருவாய்கள் என்பனவற்றை உள்ளடக்கிய போக்குவரத்து பணிகளிலிருந்தான உட்பாய்ச்சல்கள் ஏறத்தாழ 11 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு உச்சமட்ட சுற்றுலாப் பயணிகளின் வருகை காரணமாக அதிகரித்த பயணிகள் கட்டணம் மற்றும் துறை முகத்துடன் தொடர்பான பணிகளில் முக்கியமாக சரக்கு மாற்றிக்கப்பலேற்றலில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பன காரணங்களாக அமைந்த போக்குவரத்துப் பணிகளின் வெளிப்பாய்ச்சல்கள் கிட்டத்தட்ட 15 சதவீதத்தால் அதிகரித்து, இறக்குமதிகளிலான முனைப்பான அதிகரிப்பு ஏற்றுமதிகளின் வளர்ச்சியை விஞ்சியமையையும் வெளிநாடுகளுக்குப் பயணம் செய்த இலங்கையர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பினையும் பிரதிபலித்தன. இவ்வாறான நிகழ்வுகளின் மத்தியிலும், போக்குவரத்துப் பணிகளிலான தேறிய வருவாய்கள் 2004 காலப்பகுதியில் ஏறத்தாழ ஐ.அ.டொலர்கள் 209 மில்லியன்களுக்கு கிட்டத்தட்ட 4 சதவீதத்தினால் அதிகரித்தன.

### பயணம் மற்றும் சுற்றுலா

2004 இல், இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழில் முன்னெப்போதுமில்லாத அதிகூடிய ஏறத்தாழ 566,200 சுற்றுலா வருகைகளைப் பதிவு செய்தது. சுற்றுலாத் துறையிலிருந்தான மொத்த வருவாய்கள் 2003 இன் ஐ.அ.டொலர்கள் 340 மில்லியன்களிலிருந்து 2004 இல் ஐ.அ.டொலர்கள் 413 மில்லியன்களுக்கு அதிகரித்தன. வதிவற்ற இலங்கையர்களின் வருகைகளிலிருந்தான வருமானங்களை உள்ளடக்கிய, மொத்த வருவாய்கள் ஐ.அ.டொலர்கள் 513 மில்லியன்களுக்கு ஏறத்தாழ 10 சதவீதத்தினால் அதிகரித்தன. அதிகளவான இலங்கையர்கள் வெளிநாடுகளுக்கு பயணிப்பதற்கு தெரிவு செய்ததன் காரணமாக, பயணம் மீதான மொத்தச் செலவு 2004 இல் ஐ.அ.டொலர்கள் 296

அட்டவணை 5.8

**சுற்றுலாப் புள்ளி விபரங்கள் 2000–2004**

| விடயம் | 2000 | 2001 | 2002 | 2003 (அ) | 2004 (ஆ) | சதவீத மாற்றம் 2003 (அ) | சதவீத மாற்றம் 2004 (ஆ) |
|---|---|---|---|---|---|---|---|
| சுற்றுலா வருகைகள் | 400,414 | 336,794 | 393,171 | 500,642 | 566,202 | 27.3 | 13.1 |
| சுற்றுலா இரவுகள் ('000) | 4,056 | 3,342 | 3,989 | 5,093 | 5,093 | 27.7 | 12.8 |
| தங்கும் அறை வீதம் (%) | 52.3 | 42.1 | 43.1 | 53.2 | 59.3 | 23.4 | 11.5 |
| மொத்தச் சுற்றுலாப் பெறுகைகள் (ரூ.மில்.) | 19,162 | 18,863 | 24,202 | 32,810 | 41,790 | 35.6 | 27.3 |
| தலைக்குரிய சுற்றுலாப் பெறுகைகள் (ரூபா) | 47,855 | 56,008 | 61,556 | 65,536 | 73,808 | 6.5 | 13.3 |
| மொத்தத் தொழில் நிலை (எண்) | 91,063 | 80,904 | 93,170 | 112,226 | 129,038 | 20.5 | 15.0 |
| நேரடி | 37,943 | 33,710 | 38,821 | 46,761 | 53,766 | 20.5 | 15.0 |
| மறைமுக | 53,120 | 47,194 | 54,349 | 65,465 | 75,272 | 20.5 | 15.0 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை.

மூலங்கள்: இலங்கை சுற்றுலாச் சபை.
இலங்கை மத்திய வங்கி.


மில்லியன்களுக்கு ஏறத்தாழ 6 சதவீதத்தினால் அதிகரித்தது.

2004 இல் மேற்கு ஐரோப்பா, மொத்த சுற்றுலா பயணிகளின் வருகைகளில் 50 சதவீதத்திற்கு வகை கூறியதுடன் 2004 இல் 13 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்து இலங்கைக்கான மிகப்பெரிய சுற்றுலா உருவாக்கப் பிராந்தியமாக தொடர்ந்துமிருந்தது. இந்தியாவினால் முதன்மை வகிக்கப்படும் ஆசியாவிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் வருகை 12 சதவீதத்தினால் அதிகரித்து 2004 இல் மொத்த சுற்றுலாப் பயணிகளின் வருகைகளில் 35 சதவீதத்திற்கு வகைகூறியது. 2004 இல், அவுத்திரேலியா, வட அமெரிக்கா, மத்திய கிழக்கு மற்றும் கிழக்கு ஐரோப்பா என்பவற்றிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் வருகைகளும் குறிப்பிடத்தக்களவான அதிகரிப்பைப் பதிவு செய்தன.

மேம்படுத்தல் செயற்பாடுகள் மற்றும் மனித வள அபிவிருத்தி போன்றவற்றிற்காக, புறப்பாட்டு வரியில் மூன்றிலொரு பங்கும் மற்றும் சுற்றுலா நிறுவனங்களின் வருமானங்களின் மீதான ஒரு சதவீத வரியும் இலங்கை சுற்றுலாப் பயணச் சபைக்கு வழங்கப்படுகிறது. புறப்பாட்டு வரி மற்றும் சுற்றுலா நிறுவனங்களின் வருவாய்கள் மீதான ஒரு சதவீத வரி என்பன 2004 இல் முறையே ரூ.439 மில்லியன் மற்றும் ரூ.301 மில்லியன்களாகவிருந்தன. சுற்றுலாத் துறை அமைச்சு இலங்கைச் சுற்றுலாச் சபையுடன் இணைந்து நாட்டின் பிரதிமையை பிரபல்யமானதொரு சுற்றுலா மையமாக 'மீண்டெழும் இலங்கை' கட்டியெழுப்புவதற்காக மீளப்பெறுகை என அழைக்கப்படும் சிறப்பு மேம்படுத்தல் செய்முறையை அங்குரார்ப்பணம் செய்து வைத்துள்ளன.

வரைபடம் 5.6

மாதாந்தச் சுற்றுலா வருகைகள்




## தொலைத்தொடர்பூட்டல் மற்றும் தகவல் தொழில்நுட்பப் பணிகளிலான வர்த்தகம்

2003 ஏப்பிறலில், பன்னாட்டு நுழைவாயில் தாராளமயமாக்கப்பட்டதனைத் தொடர்ந்து வீழ்ச்சியடைந்து செல்லுமொரு போக்கைக் கொண்டிருந்த தொலைத் தொடர்பூட்டல் பணிகளிலிருந்தான தேறிய வருவாய்கள், இலங்கையிலிருந்து மேற்கொள்ளப்படும் பன்னாட்டு அழைப்புக்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட ஓர் அதிகரிப்புக் காரணமாக 2004 இல் ஐ.அ.டொலர்கள் 33 மில்லியன்களுக்கு 27 சதவீதத்தால் மேலும் வீழ்ச்சியடைந்தன. அதிகரித்த போட்டியின் விளைவாக, இலங்கையிலிருந்து தோற்றுவிக்கப்படும் பன்னாட்டு அழைப்புக்களுக்கான செலவு, வெளிநாடுகளிலிருந்து தோற்றுவிக்கப்படும் அழைப்புக்களுக்கான செலவைவிட குறைவாகவிருந்தது. தாராளமயமாக்கல் செயல் முறையின் ஆரம்பத்தில் இது ஒரு வழமையான போக்காக இருக்கின்றதெனினும் சிறந்த தொலைத் தொடர்பூட்டல் வசதிகளின் கிடைப்பனவு பொருளாதாரத்தின் ஏனைய துறைகளில் உற்பத்தித் திறனை முன்னேற்றும் என்பதனால் இது கரிசனைக்குரியதொரு விடயமல்ல. தொடர்பூட்டலுக்காக இணையத்தளம், தொலைநகல் மற்றும் மின்அஞ்சல் என்பவற்றின் பயன்பாடு அதிகரித்தமையும் வீழ்ச்சிக்கான ஏனைய காரணங்களாகவிருக்கலாம்.

அதேநேரம், 2004 இல் தகவல் தொழில்நுட்ப ஏற்றுமதிகளிலிருந்தான தேறிய வருவாய்கள் ஐ.அ.டொலர்கள் 72 மில்லியன்களுக்கு 11 சதவீதத்தினால் அதிகரித்தன. எனினும், ஆரம்ப கட்டத்திலான இவ் அந்நியச் செலாவணி வருவாய்கள் இந்தத் துறையில் இலங்கைக்கு அளப்பரிய எதிர்கால உள்ளார்ந்த வாய்ப்புக்கள் உள்ளதென்பதைக் எதிர்வு கூறுகின்றன. இது தொடர்பாக, நம்பிக்கையான இணைப்பு மற்றும் விரைவான பரிமாற்றம் என்பவற்றை உறுதி செய்வதற்கு தொடர்ச்சியான தேர்ச்சி அபிவிருத்தி, தொலைத் தொடர்புக் கட்டமைப்பை மேலும் விரிவாக்கம் செய்தல் என்பன தகவல் தொழில் நுட்ப ஏற்றுமதிகளின் எதிர்கால அபிவிருத்திக்கு மிகவும் முக்கிய காரணிகளாகக் காணப்படுகின்றன.

## வருமான உட்பாய்ச்சல்கள் மற்றும் வெளிப்பாய்ச்சல்கள்

அலுவல்சார் ஒதுக்குகளின் அளவு 2004 இல் குறிப்பிடத்தக்கவொரு அளவிலான வீழ்ச்சியைப் பதிவு செய்த போதிலும், உலகளாவிய வட்டி வீதத்தில் ஏற்பட்ட உயர்வுடன் இணைந்ததாக அலுவல்சார் ஒதுக்குகளை மத்திய வங்கி முன்மதிகரமாக முகாமித்ததன் காரணமாக, அலுவல்சார் ஒதுக்குகளின் முதலீடுகளிலிருந்தான வட்டி வருமானம் மற்றும் வர்த்தகப்படுத்தல் இலாபங்கள் 16 சதவீதத்தினால் அதிகரித்தன. 2003 இல் காணப்பட்ட கணிசமான பெறுமானத் தேய்வுடன் ஒப்பிடுகையில் ஏனைய முக்கிய நாணயங்களுக்கெதிரான ஐ.அ.டொலரின் குறைந்தளவிலான பெறுமானத் தேய்வு காரணமாக 2004 இல் நாணய மாற்றுப் பெறுமதி சீராக்கங்களிலிருந்தான இலாபங்கள் சிறிதளவில் வீழ்ச்சியடைந்தன. வர்த்தக வங்கிகளினால் வைத்திருக்கப்படும் ஒதுக்கங்களிலிருந்தான வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்புடன் இணைந்து அலுவல்சார் ஒதுக்கங்களிலிருந்தான வருமானம் அதிகரித்தமையால் மொத்த வெளிநாட்டு ஒதுக்குகளிலிருந்தான மொத்த வருமானத்தினை உழைப்பு கணிசமாக அதிகரித்தது. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மற்றும் பங்குதாரர்களால் தமது தாய்நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்ட இலாபங்கள் மற்றும் பங்கு இலாபங்களில் ஏற்பட்ட அதிகரிப்பு அத்துடன் வெளிநாட்டுப் படுகடன்கள் மீதான உயர்ந்த வட்டிக் கொடுப்பனவுகள் என்பன காரணமாக 2004 இல் வருமான வெளிப்பாய்ச்சல் 6 சதவீதத்தினால் அதிகரித்தது. இதன் விளைவாக, வெளிப்பாய்ச்சல்களின் மொத்த அளவு உட்பாய்ச்சல்களின் அளவை விட கணிசமானளவு அதிகரித்துக் காணப்பட்டதன் விளைவாக, வருமானக் கணக்குப் பற்றாக்குறை 2004 இல் ஐ.அ.டொலர்கள் 204 மில்லியன்களுக்கு 19 சதவீதத்தினால் விரிவடைந்தது.

## நடைமுறை மாற்றல்கள்

மாற்றல்கள் கணக்கிற்கான தேறிய உட்பாய்ச்சல்கள் விரிவடைந்த வர்த்தகப் பற்றாக்குறையை நிதியிடுவதற்கான முக்கிய மூலமாக தொடர்ந்திருந்தன. வெளிநாடுகளில் வேலை செய்யும் இலங்கையர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட பகுதியளவிலானதொரு அதிகரிப்புக் காரணமாக தொழிலாளர்களின் பணவனுப்பல்கள் 2004 இல் ஐ.அ.டொலர்கள் 1,564 மில்லியனிற்கு 11 சதவீதத்தினால் அதிகரித்தன. தொழில்வாய்ப்பிற்காக குடிபெயர்ந்தவர்களின் ஆண்டு எண்ணிக்கை 2004 இல் 213,114 இற்கு 2 சதவீதத்தினால் அதிகரித்தது.

மத்தியகிழக்குப் பிராந்தியத்திலிருந்தான தொழிலாளர்களின் பணவனுப்புதல்கள் மொத்தத் தனியார் மாற்றல்களில் 55 சதவீதத்திற்கு வகைகூறின. ஒப்பீட்டு ரீதியில் சிறந்த ஊதியங்கள் வழங்கப்படும் ஐரோப்பாவில் தொழில் வாய்ப்புக்கள் அதிகரித்து வருவதன் காரணமாக, தொழிலாளர்களின் எண்ணிக்கையிலானதொரு அதிகரிப்பின் மத்தியிலும் மத்திய கிழக்குப் பிராந்தியத்திலிருந்தான வருவாய்கள் ஒப்பீட்டு ரீதியாக 2000 ஆம் ஆண்டிலிருந்து படிப்படியாக வீழ்ச்சியடைந்து வருகின்றன. மேற்கு ஆசிய நாடுகள் தேர்ச்சியற்ற தொழிலாளர்களை குறிப்பாக வீட்டுப் பணிப்பெண்களை பெருமளவில் வேலைக்கமர்த்துகின்றன. 2004 இல், மொத்த மாற்றல் பெறுகைகளில் ஏறத்தாழ 18 சதவீதம் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிலிருந்து பெறப்பட்டதுடன், இது கடந்த 5 ஆண்டுகளாக தொடர்ச்சியானதொரு வளர்ச்சியைப் பதிவு செய்தது. மொத்த பணவனுப்பலில், ஏனைய ஐரோப்பிய நாடுகள் வட அமெரிக்கா, மற்றும் தூர கிழக்கு நாடுகள் என்பன முறையே கிட்டத்தட்ட 8 சதவீதம், 7 சதவீதம் மற்றும் 5 சதவீதத்திற்கு, பங்களிப்புச் செய்து குறிப்பிடத்தக்க ஏனைய பங்களிப்பாளர்களாகவிருந்தன.

ஏற்றுமதிகளுக்கு அடுத்த மிகப்பெரிய தனியானதொரு வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சலாக தொழிலாளர் பணஅனுப்பல்கள் விளங்கியதுடன், நடைமுறைக் கணக்கின் மீதான வர்த்தகப் பற்றாக்குறையின் தாக்கத்தை எதிரீடுசெய்வதில் முக்கியமானதொரு பங்கினை வகித்தது. இன்னும் முறைசாரா வழிமுறைகளூடாக கணிசமான தொகை தொழிலாளர் பணஅனுப்பல்கள் நாட்டிற்குள் வந்து கொண் டிருப்பதாக அறிக்கையிடப்பட்டிருக்கிறது. கிராமியப் பகுதிகளில் உள்ள வங்கிக் கிளைகளில் பண மாற்றல் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் மற்றும் பிரயோகிக்கத்தக்க கட்டணங்களின் ஒழுங்குபடுத்தல் என்பன, முறைசார் வழிகளூடான பணஅனுப்புதல்களை வசதிப்படுத்தும். இதனை அடையும் விதத்தில்

கணக்குகளைத் திறக்கவும் வெளிநாடுகளில் வேலைசெய்யும் இலங்கையர்களிடமிருந்து பணஅனுப்பல்களை திரட்டிக்கொள்ளவும் தேசிய சேமிப்பு வங்கிக்கும் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. மேலும், அரச வங்கிகளினூடாக பணஅனுப்புதல்களைச் செய்யும் தொழிலாளர்களுக்கு வீடமைப்புக் கடன் வசதிகள் போன்ற பல்வேறு ஊக்குவிப்புக்களை அறிமுகப்படுத்த 2005 வரவு செலவுத் திட்டம் முன்மொழிந்துள்ளது.


குறைந்த வெளிநாட்டு உதவி உட்பாய்ச்சல்களுக்கு இணையாக அலுவல்சார் நடைமுறை மாற்றல்களான உணவு மற்றும் பண்ட உதவிகள், காசுக்கொடைகள், மற்றும் தொழில் நுட்ப உதவிக் கொடைகள் போன்ற ன 2004 இல் ஐ.அ.டொலர்கள் 30 மில்லியன்களுக்கு 17 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.

## 5.5 மூலதன மற்றும் நிதிக்கணக்குகள் மற்றும் சென்மதி நிலுவைகள்

### மூலதன மற்றும் நிதிக்கணக்குகள்

மூலதன மற்றும் நிதிக்கணக்குகளின் ஒன்றிணைந்த மிகைகள் வழமையாக நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையை நிதியிடப் பயன்படுத்தப் படுகிறது. நடைமுறைக் கணக்கு பற்றாக்குறையை நிதியிடப்பட்டதன் பின்னர் மூலதன மற்றும் நிதிக்கணக்குகளில் காணப்படும் மிகை அல்லது பற்றாக்குறை முறையே சென்மதி நிலுவையின் மிகை அல்லது பற்றாக்குறையை பிரதிபலிக்கிறது. கொடையாளர்களிடமிருந்தான பெரும்பாலும் அரசுக்கான மூலதனத் தன்மைகளைக் கொண்ட கொடைகளைப் பதிவு செய்கின்ற மூலதனக் கணக்கு ஐ.அ.டொலர்கள் 64 மில்லியன்களுக்கு 14 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. நிதியியல் கணக்கு 2003 இல் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொலர்கள் 648 மில்லியன் மிகையுடன் ஒப்பிடுகையில் 2004 இல் ஐ.அ.டொலர்கள் 572 மில்லியன்கள் கொண்ட மிகையொன்றினைப் பதிவு செய்தது. கடன்கள் மற்றும் கொடைகள் மூலமான அலுவல்சார் உட்பாய்ச்சல்கள் குறைவடைந்தமையின் காரணமாக மூலதன மற்றும் நிதிக் கணக்குகளின் மிகையில் வீழ்ச்சி காணப்பட்டது. இவ்வீழ்ச்சி, வெளிநாட்டு நேரடி முதலீடுகள், கடன்கள் மற்றும் சொத்துப்பட்டியல் உட்பாய்ச்சல்கள் மூலமாக ஏற்பட்ட உயர்ந்தளவான தனியார் மூலதன உட்பாய்ச்சல்களின் மூலம் பகுதியளவில் எதிரீடு செய்யப்பட்டது.

வரைபடம் 5.7
**அலுவல்சார் மற்றும் தனியார் மூலதன உட்பாய்ச்சல்கள்**




### வெளிநாட்டு நேரடி முதலீடுகள்

முன்னர் உடன்படிக்கை செய்யப்பட்ட, பெரும் எண்ணிக்கையிலான முதலீட்டுச் சபை உடன் படிக்கைகளை நடைமுறைப்படுத்தப்படுத்தியதன் விளைவாக 1997 இற்குப் பின்னரான ஆகக்கூடிய ஆண்டுப் பாய்ச்சல்களை நாடு பெற்றுக் கொண்டதன் காரணமாக, தனியார்மயப்படுத்தல் பெறுகைகளை உள்ளடக்கிய இலங்கைக்கான வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் 2004 இல் ஐ.அ.டொலர்கள் 233 மில்லியனுக்கு 2 சதவீதத்தினால் அதிகரித்தன. ஆயினும், தேர்தலின் பின்னரான அரசியல் நிச்சயமற்ற தன்மையின் பகுதியளவு காரணமாகவும் மற்றும் முதலீடுகளின் தரம் மற்றும் நம்பகத்தன்மை என்பவற்றை உறுதிப்படுத்துவதற்காக வெளிநாட்டு நேரடி முதலீடுகளுக்கான விண்ணப்பப் படிவங்களை மிகவும் கவனமாக அலசி ஆராய்ந்தமையின் பகுதியளவு காரணமாகவும் 2004 காலப்பகுதியில் வெளிநாட்டு நேரடி முதலீடுகளுக்கான ஒப்புதல்களும் கடப்பாடுகளும் வீழ்ச்சியடைந்து காணப்பட்டன. ஆயினும், இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட செயற் திட்டங்கள் பெரும்பாலும் நடைமுறைப்படுத்தப்படு மென்பதால், குறைந்தளவான வெளிநாட்டு நேரடி முதலீட்டு ஒப்புதல்கள் உண்மையான வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல்களை எதிர்காலத்தில் குறைக்க மாட்டாது. பணிகள் துறை வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல்களில் (47.7 சதவீதம்) உயர்ந்தளவான சதவீதத்தைப் பதிவு செய்து தோற்றம் பெற்றுவரும் உலகளாவிய போக்குகளுக்கு ஒத்திசைவாக தயாரிப்புக் கைத்தொழிலிலிருந்து பணிகளை அடிப்படையாகக் கொண்ட கைத் தொழில்களை நோக்கிய தொடர்ச்சியாக நகரும் ஒரு போக்கினைச் சுட்டிக்காட்டியது. வெளிநாட்டு நேரடி முதலீட்டு வெளிப்பாய்ச்சல்கள், ஒவ்வொன்றும் தனித்தனியாக பரிசீலிக்கப்பட்டு அனுமதிக்கப் பட்டமையால் இவ்வாண்டில் அவை தொடர்ந்தும் ஐ.அ.டொலர்கள் 6 மில்லியன்களாக குறைந்த மட்டத்தில் காணப்பட்டன.

அட்டவணை 5.9
**2004 இல் வெளிநாட்டுக் கடன் வழங்கல் மூலம் நிதியிடப்பட்ட முக்கிய செயற்றிட்டங்கள்**

| கொடை வழங்குனர் | செயற்றிட்டம் | பகிர்ந்தளிக்கப்பட்ட தொகை ஐ.அ.டொ.மில். |
|---|---|---|
| ***ஆசிய அபிவிருத்தி வங்கி*** | | **184.8** |
| | இதில் மூன்றாவது வீதி அபிவிருத்தித் செயற்றிட்டம் | 26.2 |
| | பெருந்தோட்ட மறுசீரமைப்புத் செயற்றிட்டம் | 17.7 |
| | இறை முகாமை மறுசீரமைப்பு நிகழ்ச்சித் திட்டம் | 15.6 |
| | வ.ம.மா கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டம் | 15.0 |
| | கிராமிய நிதியியல் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 14.9 |
| | மேல் நீரேந்து பிரதேச முகாமைத் செயற்றிட்டம் | 14.7 |
| | 3ஆவது நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத்துறை | 11.7 |
| | தென் மாகாண வீதி அபிவிருத்தித் செயற்றிட்டம் | 11.5 |
| ***பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு*** | | **67.8** |
| | இதில் ஆசிரியர் கல்வி மற்றும் ஆசிரியர் அபிவிருத்தி | 14.0 |
| | தனியார் துறைக் உட்கட்டமைப்பு அபிவிருத்தித் செயற்றிட்டம் | 11.9 |
| | சுற்றாடல் நடவடிக்கை செயற்றிட்டம் 1 | 10.5 |
| | இரண்டாவது பொதுக் கல்வி செயற்றிட்டம் | 7.4 |
| ***யப்பான்*** | | **270.9** |
| | இதில் சிறிய அளவு உட்கட்டமைப்பு புத்தாக்கம் | 60.4 |
| | சிறிய நுண்பாக தொழில் முயற்சி ஊக்குவிப்பு | 30.8 |
| | குக்குலே கங்கா நீர்மின்வலு செயற்றிட்டம் | 24.1 |
| | சிறிய அளவு உட்கட்டமைப்பு புத்தாக்கம் மற்றும் தரமுயர்த்தலும் | 18.4 |
| | பண்டாரநாயக்கா சருவதேச விமானநிலைய அபிவிருத்திச் செயற்றிட்டம் | 16.7 |
| | கொழும்பு பெரும்பாகத்துக்கான களுகங்கை நீர் வழங்கல் செயற்றிட்டம் | 15.3 |

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
வெளிநாட்டு மூலவள திணைக்களம்

## தனியார் மயமாக்கல் பெறுகைகள்

தனியார் மயமாக்கல் பெறுகைகளின் வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் 2003 இன் ஐ.அ.டொலர்கள் 30 மில்லியன்களிலிருந்து 2004 இல் ஐ.அ.டொலர்கள் 10 மில்லியன்களுக்கு வீழ்ச்சியடைந்ததுடன் இது இலங்கை இந்தியன் எண்ணெய்க் கம்பனியிடமிருந்து பெறப்பட்ட எஞ்சிய தொகையாகும். 2004 இல், நாட்டின் பெருமளவிலான தனியார் மயமாக்கல் பெறுகைகள் வெளிநாட்டு மூலங்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் சொத்தில் ஒரு பகுதியையும் மற்றும் ஏனைய பல அரசதுறை தொழில் முயற்சிகள் என்பவற்றினை உரிமை மாற்றம் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தின் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட நிதிகளில் பெரும்பகுதி கிடைக்கப் பெறவில்லை.

## அரசாங்கத்திற்கான கடன் மூலதனம்

2004 இல் அரசாங்கத்திற்கான மொத்த நீண்டகால உட்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர்கள் 771 மில்லியன்களுக்கு 16 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் வெளிப்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர்கள் 28 மில்லியன்களால் ஐ.அ.டொலர்கள் 331 மில்லியன்களுக்கு வீழ்ச்சியடைந்தன. அமைப்புச் சார்ந்த சீர்திருத்தங்களின் நடைமுறைப்படுத்தலில் ஏற்பட்ட காலதாமதத்தின் முக்கிய காரணமாக, நிகழ்ச்சித் திட்டக் கடன்கள் 2003 இன் ஐ.அ.டொலர்கள் 226 மில்லியன்களிலிருந்து 2004 இல் ஐ.அ.டொலர்கள் 30 மில்லியன்களுக்கு குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தன. செயற்றிட்டக் கடன்களின் பகிர்ந்தளிப்பு 2003 இன் ஐ.அ.டொலர்கள் 569 மில்லியன்களிருந்து 2004 இல் ஐ.அ.டொலர்கள் 591 மில்லியன்களுக்கு 4 சதவீதத்தினால் அதிகரித்தது. ஆண்டின் இறுதிப் பகுதியில் செயற்றிட்டங்கள் விரைவாக நடைமுறைப்படுத்தப்பட்டமை செயற்றிட்டக் கடன் பங்களிப்புக்களை அதிகரிப்பதற்கு உதவியாகவிருந்தது.

பெறப்பட்ட மொத்தக் கடன்களில், 93 சதவீதம் சலுகை நியதிகளிலும் மற்றும் எஞ்சிய 7 சதவீதம் வர்த்தக நியதி மற்றும் நிபந்தனைகளுடனும் பெறப்பட்டன. 2004 இல் பல்புடை கடன் வழங்கும் முகவர் நிறுவனங்கள் பெருமளவிலான வெளிநாட்டுக் கடன்களை வழங்கின. ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு என்பன முறையே கிட்டத்தட்ட ஐ.அ.டொலர்கள் 185 மில்லியன் மற்றும் ஐ.அ.டொலர்கள் 68 மில்லியன்களை வழங்கி முக்கிய பல்புடை கடன்வழங்கும் முகவர் நிறுவனங்களாக விளங்கின. இருபுடை உதவிகள், ஐ.அ.டொலர்கள் 347 மில்லியன்களாக இருந்ததுடன், இதில் யப்பானிலிருந்து ஐ.அ.டொலர்கள் 271 மில்லியன்களும், சேர்மனியிலிருந்து ஐ.அ.டொலர்கள் 25 மில்லியன்களும் பெறப்பட்டன. யப்பானிலிருந்து பெறப்பட்ட நிதி உதவிகள் மொத்த சலுகைக் கடன்களில் ஏறத்தாழ 38 சதவீதத்திற்கு வகைகூறியவேளையில், ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு என்பன முறையே 26 சதவீதத்திற்கும், 10 சதவீதத்திற்கும் வகைகூறின.

சலுகை அடிப்படையிலான நியதிகள் மற்றும் நிபந்தனைகளுடனான வெளிநாட்டு நிதியிடலில் ஏற்பட்ட பற்றாக்குறையானது, புதிய வழங்கல்கள் மற்றும் வர்த்தக ரீதியான நியதிகள் மற்றும் நிபந்தனைகளுடனான வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட கடன்களை மீளப்பயன்படுத்துதல் என்பனவற்றினால் எதிரீடு செய்யப்பட்டது. இக்கடன்கள் பற்றாக்குறையை நிதியிடுவதற்கான ஒரு தற்காலிக நிவாரணமாக மட்டுமே அமையுமேயொழிய, பெருமளவு சலுகை ரீதியான நியதிகள் மற்றும் நிபந்தனைகளைக் கொண்ட நடுத்தர மற்றும் நீண்டகால வெளிநாட்டு நிதியிடலுக்கு இது ஒரு பதிலீடாக இருக்கமாட்டாது. வெளிநாட்டுத் துறையினைப் பொறுத்தவரையில், இவ்வாறான டொலரில் குறித்துரைக்கப்பட்ட கடன்கள் நாட்டுக்குள் மேலதிக மூலதனப் பாய்ச்சலைக் கொண்டுவர மாட்டாது. ஏனெனில், பெரும்பாலான உள்நாட்டு வர்த்தக வங்கிகள் அரசுக்கான வெளிநாட்டுச்

செலாவணி வங்கித் தொழில் பிரிவுக் கடன்கள் எனும் வடிவில் இலங்கை அபிவிருத்தி முறிகளில் முதலீடு செய்வதனாலாகும். இது வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டு ஒதுக்குகளிலிருந்து அலுவல்சார் வெளிநாட்டு ஒதுக்குகளுக்கான உள்ளடக்க ரீதியான நகர்வாக மட்டும் இருக்கும். பொதுப்படுகடன் நோக்கில் பார்க்கும்போது உயர்ந்த செலவு மற்றும் குறைந்த முதிர்ச்சி என்பன காரணமாக இக்கடன்கள் படுகடன் பணிக்கொடுப்பனவு சுமையை அதிகரிக்கும். ஆகையால், சலுகை அடிப்படையிலான நியதிகள் மற்றும் நிபந்தனைகளுடன் கிடைக்கக்கூடிய வெளிநாட்டு உதவிகளை அதிகரித்தளவில் பயன்படுத்துவதற்கான முயற்சிகள் வெளிநாட்டு நிதியிடலில் மிகவும் முக்கியமான உத்தியாக அமைய வேண்டும்.

வெளிநாட்டு உதவிப் பயன்பாட்டு வீதம் 2003 இன் 24 சதவீதத்திலிருந்து 2004 இல் 18 சதவீதத் திற்கு 6 சதவீதப் புள்ளிகளால் வீழ்ச்சியடைந்தது. 2004 இன் முற்பகுதியில் நிலவிய நிச்சயமற்ற அரசியல் சூழ்நிலை மற்றும் நிறுவன ரீதியான பலவீனங்கள், காரணமாக செயற்றிட்ட நடைமுறைப்படுத்தலில் ஏற்பட்ட தாமதங்கள், நெகிழ்ச்சி யற்ற நடைமுறைகள் மற்றும் நிர்வாகச் சிக்கல்கள் என்பன வெளிநாட்டு உதவியின் இக்குறைந்தளவான பயன்பாட்டிற்கு பங்களிப்புச் செய்தன. நிதிகளின் பயன்பாட்டைத் துரிதப்படுத்துவதற்காக அரசாங்கத் தினால் நியமிக்கப்பட்ட குழு இவ்வாறான பிரச்சனைகளை வெற்றி கொள்வதற்கும் பல நடவடிக்கைகளை எடுத்தபோதிலும், மிகச்சிறந்த உச்ச மட்டத்தினை அடைவதற்கு இடைவெளிகள் இன்னும் நிரப்பப்பட வேண்டியுள்ளதனை மொத்த உதவிப் பயன்பாட்டு வீகிதங்கள் சுட்டிக்காட்டுகின்றன. அரசாங்கத்திற்கான கொடை உதவிகள் தொடரானதொரு சலுகைகளுடன் கிடைக்கின்றன. ஆகையால், இம்மூலத்திலிருந்தான நிதியங்களின் செலவு, மாற்று வர்த்தக ரீதியான மூலங்களை விடவும் மிகவும் குறைவாக இருப்பதால், அத்தகைய நிதியங்களை திறமையாகவும் உரிய நேர த்திலும் பயன்படுத்துவது மிகவும் முக்கியமானதாகும்.

2003 இல் வெளிநாட்டு உதவி பயன்பாட்டு வீகிதாசாரங்களில் காணப்பட்ட சிறிதளவான முன்னேற்றத்திற்கு வெளிநாட்டு நிதியிடப்பட்ட செயற் றிட்டங்களின் விரைவான நடைமுறைப்படுத்தலின் மீது முக்கிய கவனத்தைக் கொண்டிருந்த தற்காலிகமான நிறுவன ரீதியான அமைப்புமே பகுதியளவு கார ணமாகவிருந்தது. நடைமுறைப்படுத்தல் செயல்முறை யினை மிகவும் திறனுள்ளதாக்குவதற்கு பொருத்தமான அதிகாரத்துடன், நிரந்தரமான நிறுவன ரீதியான அமைப்பொன்றை உருவாக்குவது சலுகை அடிப்படையிலான நியதிகள் மற்றும் நிபந்தனைகளில் கிடைக்கக்கூடிய கொடை உதவிகளின் பயன்பாட்டை மேம்பாடடையச் செய்யும். சுனாமியின் பின்னரான மீள்கட்டுமானத்திற்காக உறுதியளிக்கப்பட்ட கொடை உதவியின் பயன்பாட்டினை துரிதப்படுத்துவதற்காக, நாட்டை மீளகட்டியெழுப்புவதற்கான செயலணி எனும் வடிவத்தில் அரசு ஏற்கனவே அத்தகையதொரு நிறுவன ரீதியான கட்டமைப்பு ஒன்றை உருவாக்கியுள்ளது.

## தனியார் துறைக்கான கடன் மூலதனம்

தனியார் துறை மற்றும் அரச கூட்டுத் தாபனங்களுக்கான நீண்டகால மூலதனப் பாய்ச்சல்கள் 2003 இன் ஐ.அ.டொலர்கள் 101 மில்லியன்களிலிருந்து 2004 இல் ஐ.அ.டொலர்கள் 169 மில்லியன்களுக்கு அதிகரித்தன. இவ்வதிகரிப்பிற்கான பிரதான பங்களிப்பு இலங்கை ரெலிகொம் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட ஐ.அ.டொலர்கள் 100 மில்லியன் பெறுமதி கொண்ட முறிகளின் வெற்றிகரமான வழங்கலின் மூலம் கிடைத்ததுடன், இது வெளிநாட்டு முதலீட்டாளர்களால் பல மடங்குகள் மிகையாகக் கோரப்பட்டது. இது பன்னாட்டுச் சந்தையில் இலங்கைக் கம்பனி ஒன்றினால் முதன் முதலாக மேற்கொள்ளப்பட்ட பன்னாட்டு முறி வழங்கலாக இருந்ததுடன் இது எதிர்காலத்தில் இவ்வாறான சந்தைகளில் மற்றைய இலங்கைக் கம்பனிகளும் மூலதனத்தைப் பெற்றுக்கொள்வதை ஊக்குவிக்கும். இந்த முறி வழங்கல் மூலம், எவ்வித அரச உத்தரவாதமுமின்றி ஒப்பீட்டு ரீதியில் குறைந் தளவான வட்டி வீதத்தில் கம்பனி நிதிகளைத் திரட்டிக் கொள்ளக் கூடியதாகவிருந்தது. இந்நோக்கத் திற்காக, நாட்டிற்கான சுயாதீனமான பன்னாட்டு தர மிடல் இல்லையாகையால் இலங்கை ரெலிகொம் பன்னாட்டு தரமிடலை சுதந்திரமாகப் பெற வேண்டியிருந்தது. ஆகையால், சுயாதீனமான நாட்டிற்கான தரமிடல் கிடைக்கத்தக்கதாக இருப்பது, சிறந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகளில், தனியார் துறை பன்னாட்டுச் சந்தையில் நடுத்தர மற்றும் நீண்டகால நிதிகளைத் திரட்டுவதற்கு வசதியளிக்கும். உள்நாட்டுக் கடன்வழங்கல் வீதங்கள் கவர்ச்சிகர மானதாக இருந்தபடியினால், இலங்கை ரெலிகொம் நிறுவனத்தினால் திரட்டப்பட்ட நிதியைத் தவிர ஒரு சில தனியார் துறை கம்பனிகள் மட்டுமே 2004 இல் புதிய வெளிநாட்டுக் கடன்களைப் பெற்றுக்கொண்டன.

கடந்த காலத்தில், உத்தரவாதங்களை வழங்குதல் அல்லது கொடை நிதிகளைப் பயன்படுத்தி அரசாங்கம் கடன்களை வழங்குவதன் மூலம் தனியார் துறைக்கான வெளிநாட்டுக் கடன்கள் அரசாங்கத் தலையீட்டின் மூலம் பெருமளவில் ஒழுங்கு செய்யப்பட்டது. பெரும் எண்ணிக்கையான அரச கூட்டுத்தாபனங்கள்

அரசுக்குச் சொந்தமாக இருந்ததமையே இதற்கான பகுதியளவு காரணமாகவிருந்தது. இக்கூட்டுத்தாபனங்கள் தனியார் மயமாக்கப்பட்டமை மற்றும் பொதுப்படுகடன் அதிகரித்தமை என்பன காரணமாக தனியார் துறையினருக்கு நடுத்தர மற்றும் நீண்ட காலக் கடன்களைத் திரட்டுவதற்கான தலையீட்டிலிருந்து அரசாங்கம் படிப்படியாக விலகிச்சென்றது. உயர்ந்த பொருளாதார வளர்ச்சியை எய்துவதற்கு, தேவையானளவு முதலீடுகளைப் பேணுவதற்கு உள்நாட்டு வளங்கள் போதுமானதாக இல்லாமையினால், தனியார்துறை முதலீடுகளை மேம்பாடடையச் செய்வதற்கு போட்டித்தன்மை மிக்க வட்டி வீதங்களில் நடுத்தர மற்றும் நீண்டகால மூலதனத்தை வெளிநாட்டு மூலங்களிலிருந்து கவர்ந்து கொள்வதற்கான தேவை நாட்டிற்கு இன்னமும் இருக்கின்றது. இலங்கைக்கு சுயாதீனமான தரமிடலைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம், தனியார் துறையினர் வெளிநாட்டுக் கடன்களைப் பெற்றுக்கொள்ள உதவுவதன் மூலம் அரசாங்கம் வசதிப்படுத்துனராக தொழிற்பட முடியும். இது தொடர்பில், இலங்கைக்கான சுயாதீனமிக்க நாட்டின் தரமிடலைப் பெற்றுக் கொள்வதற்கென பொருளாதார அபிவிருத்திக்கான தேசிய சபையின் கீழ் அண்மையில் எடுக்கப்பட்ட தீர்மானம் சரியானதொரு பாதையில் எடுக்கப்பட்ட ஒரு நடவடிக்கையாகவுள்ளது.

### குறுங்கால மூலதனம்

சொத்துப்பட்டியல் முதலீடுகள் 2003 இன் ஐ.அ.டொலர்கள் 2 மில்லியன் கொண்ட சிறிதளவானதொரு உட்பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில் 2004 இல் ஐ.அ.டொலர்கள் 11 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலைப் பதிவு செய்தது. பிராந்தியத்திலுள்ள மற்றைய பங்குச்சந்தைகளுடன் ஒப்பிடும்போது இவ்வாண்டுக் காலத்தில் கொழும்பு பங்குச் சந்தை மிகவும் திறமையாகத் தொழிற்பட்டு முதலீட்டாளர்களின் நம்பிக்கையிலேற்பட்ட வளர்ச்சியொன்றைச் சுட்டிக்காட்டியது. பிரபலமான கம்பனிகளின் பங்குகளை வாங்குவதில் காணப்பட்ட விருப்பத்துடன் உயர் வளர்ச்சிக்கான உள்ளார்ந்த வளங்களும் இணைந்து இவ்வாண்டுக் காலத்தில் இலங்கையின் பங்குகளில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் முதலீடு செய்வதைத் தூண்டியது. அதேவேளை, வெளிநாட்டு வர்த்தகத்தில் ஏற்பட்ட விரிவாக்கம் காரணமாக குறுங்கால ஏற்றுமதி மற்றும் இறக்குமதியுடன் தொடர்பான வழங்குநர்களது கொடுகடன் என்பனவற்றை உள்ளடக்கிய தனியார் குறுங்கால கொடுகடன் 2003 இல் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொலர்கள் 19 மில்லியன் கொண்ட உட்பாய்ச்சலொன்றுடன் ஒப்பிடுகையில், ஐ.அ.டொலர்கள் 28 மில்லியன்களைக் கொண்ட உயர்ந்ததொரு தேறிய உட்பாய்ச்சலைப் பதிவு செய்தது.

வர்த்தக வங்கிகள் தமது வெளிநாட்டு சொத்துக்களில் சிலவற்றை வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட உள்நாட்டுச் சொத்துக்களாக (இலங்கை அபிவிருத்தி முறிகள் மற்றும் வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகளின் கடன்கள்) மாற்றுவதற்கு மத்தியிலும், வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் கடந்த ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 95 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2004 இல் ஐ.அ.டொலர்கள் 152 மில்லியன்கள் கொண்ட அதிகரிப்பைப் பதிவு செய்தன. வதிவற்றோர் வெளிநாட்டு நாணய கணக்குகளிற்கான தனியார் பணஅனுப்புதல்களில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பு, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களை இலங்கை இந்தியன் எண்ணெய்க் கம்பனிக்கு விற்றதனால் பெறப்பட்ட தனியார் மயமாக்க பெறுகைகளின் எஞ்சிய தொகை, இலங்கை ரெலிகொம் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பன்னாட்டு முறி மற்றும் வர்த்தக வங்கிகள் மற்றும் ஏனைய சில தனியார் துறை தொழில் முயற்சிகளின் வெளிநாட்டுக் கடன்பாடுகள் என்பவற்றின் காரணமாக வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுச் சொத்துக்கள் அதிகரித்தன. வெளிநாட்டு நாணய வைப்புக்களில் ஏற்பட்ட கணிசமானதொரு அதிகரிப்புக் காரணமாக வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுப் பொறுப்புக்கள் அதிகரித்தன. ஒப்பீட்டு ரீதியில் இரண்டாவது மற்றும் மூன்றாவது காலாண்டு பகுதிகளில் காணப்பட்ட ரூபாவின் உயர்ந்தளவிலான பெறுமானத்தேய்வும், 2004 இன் நான்காம் காலாண்டுப் பகுதியில் எதிர்பார்க்கப்பட்ட மேலுமொரு பெறுமானத்தேய்வும் வர்த்தக வங்கிகள் கடந்த ஆண்டிலும் பார்க்க பெருமளவிலான சொத்துக்களை வெளிநாட்டு நாணயத்தில் ஒன்றுதிரட்டவும் மற்றும் வைத்திருக்கவும் ஊக்குவித்தன.

### சென்மதி நிலுவையும் வெளிநாட்டு ஒதுக்குகளும்

விரிவடைந்த நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையை நிதியிடுவதற்கு மூலதன மற்றும் நிதி கணக்குகளுக்கான தேறிய உட்பாய்ச்சல்கள் போதுமானதாக இல்லாமையினால், திரண்ட சென்மதி நிலுவை 2003 இல் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொலர்கள் 502 மில்லியன் மிகையுடன் ஒப்பிடுகையில் 2004 இல் ஐ.அ.டொலர் 205 மில்லியன் பற்றாக்குறையினை பதிவு செய்தது. இப்பற்றாக்குறையானது, 2004 இல் செலாவணி வீதம் மற்றும் அலுவல்சார் ஒதுக்குகள் மீது அழுத்தத்தினை ஏற்படுத்தியது.

அட்டவணை 5.10
**இலங்கையின் வெளிநாட்டுச் சொத்துக்கள் (அ)**

| உடைமையாளர் | ஐ.அ.டொலர் மில்லியன் (ஆ) | | | | | ரூபா மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2000 | 2001 | 2002 | 2003 | 2004 | 2000 | 2001 | 2002 | 2003 | 2004 |
| 1. அரசு | 22 | 78 | 46 | 55 | 95 | 1767 | 7302 | 4424 | 5320 | 9897 |
| 2. அரச முகவர்கள் | - | - | - | - | - | - | - | - | - | - |
| 3. மத்திய வங்கி | 1,026 | 1,260 | 1,654 | 2,274 | 2,101 | 81,819 | 117,365 | 160,018 | 219,984 | 219,795 |
| 4. மொத்த அலுவல்சார் சொத்துக்கள் | 1,049 | 1,338 | 1,700 | 2,329 | 2,196 | 83,585 | 124,668 | 164,442 | 225,304 | 229,693 |
| 5. வர்த்தக வங்கிகள் | 1,083 | 900 | 795 | 889 | 1,243 | 86,682 | 83,815 | 76,921 | 86,011 | 129,987 |
| 6. மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் | 2,131 | 2,238 | 2,495 | 3,218 | 3,438 | 170,268 | 208,482 | 241,364 | 311,315 | 359,680 |
| 7. மொத்த அலுவல்சார் சொத்துக்கள்- மாதத்தில் | | | | | | | | | | |
| 7.1 வணிக இறக்குமதிகள் | 1.7 | 2.7 | 3.3 | 4.2 | 3.3 | | | | | |
| 7.2 பொருட்கள் பணிகளின் இறக்குமதி | 1.5 | 2.3 | 2.9 | 3.6 | 2.9 | | | | | |
| 8. மொத்தச் சொத்துக்கள் - மாதத்தில் | | | | | | | | | | |
| 8.1 வணிக இறக்குமதிகள் | 3.5 | 4.5 | 4.9 | 5.8 | 5.2 | | | | | |
| 8.2 பொருட்கள் பணிகளின் இறக்குமதி | 3.1 | 3.8 | 4.2 | 5.0 | 4.5 | | | | | |


மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) 2002இன் பின்னரான ஒதுக்கங்கள் சந்தைவிலையில் கணிக்கப்பட்டுள்ளன.

(ஆ) மத்திய வங்கியின் பன்னாட்டு ஒதுக்குகளின் கீழான சில விடயங்கள் மட்டும் பன்னாட்டு நாணய நிதியத்துடன் இணங்கப்பட்ட பிரதிநித்துவ வீதங்களில் மாற்றப்பட்டுள்ளன. இவை தவிர்ந்த ஏனையவை கீழே தரப்பட்டுள்ள ஆண்டு இறுதி வீதங்களில் மாற்றப்பட்டன.

| ஆண்டு | 2000 | 2001 | 2002 | 2003 | 2004 |
|---|---|---|---|---|---|
| ஐ.அ.டொலர் ஒன்றுக்கு ரூபா | 80.06 | 93.16 | 96.75 | 96.74 | 104.61 |

வரைபடம் 5.8
**காலாண்டு வெளிநாட்டுச் சொத்துக்கள்**




## வெளிநாட்டு ஒதுக்குகள்

கடந்த மூன்று ஆண்டுகளாக தொடர்ச்சியாக சென்மதி நிலுவையில் பதிவு செய்யப்பட்ட மிகைகளைப் பிரதிபலித்து 2001 இலிருந்து அதிகரித்து வந்த நாட்டின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2004 இல் வீழ்ச்சியடைந்தன. வரலாற்றிலேயே மிக உயர்ந்த எண்ணெய் விலைகள் உள்ளிட்ட பன்னாட்டு பண்ட விலைகள், இடைநிலை மற்றும் முதலீட்டுப் பொருட்கள் இரண்டினதும் அதிகரித்த அளவுடன் இணைந்து இவ்வாண்டின் இறக்குமதிச் செலவுகளைக் கணிசமானளவு அதிகரிக்கச் செய்து வெளிநாட்டு ஒதுக்குகள் மற்றும் செலாவணி வீதங்கள் என்பவற்றின் மீது அழுத்தத்தினை ஏற்படுத்தியது. இது, அரசுக்கான கொடை உதவிகளை பகிர்ந்தளிப்பதிலான தாமதத்துடன் இணைந்து இரண்டாம் மற்றும் மூன்றாம் காலாண்டுப் பகுதிகளில் செலாவணிச் சந்தையில் மிகையானதொரு அடிக்கடி மாறுபாடடையும் தன்மைக்கு ஏற்றத்தாழ்வை இட்டுச்சென்று வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலான மிதமிஞ்சிய மாறுபாடடையும் தன்மையை கட்டுப்படுத்துவதற்காக மத்திய வங்கியின் தலையீட்டைத் தேவைப்படுத்தி, இறுதியில், இது ஒதுக்குகளில் இழப்புக்களை விளைவித்தது. ஆயினும், புதிய வழங்கல்கள் மற்றும் வெளிநாட்டு நாணயக் கடன்களை மீளப் பயன்படுத்துதல், ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் யப்பானிலிருந்து பெறப்பட்ட நிதி உதவிகள் மற்றும் நான்காம் காலாண்டுப் பகுதியில் இலங்கை ரெலிகொம் நிறுவனத்தினால் அரசுக்கு மீளச் செலுத்தப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன் என்பன வாயிலாக அலுவல்சார் ஒதுக்குகளிலான வீழ்ச்சியை ஓரளவுக்கு கட்டுப்படுத்தக் கூடியதாகவிருந்தது. இவ்வபிவிருத்திகளைப் பிரதிபலிக்கும் விதத்தில், 2003 இல் ஐ.அ.டொலர்கள் 2,329 மில்லியனாக இருந்த மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2004 திசெம்பர் முடிவில் ஐ.அ.டொலர்கள் 2,196 மில்லியன்களுக்கு வீழ்ச்சியடைந்தன.

அடிப்படை குறிகாட்டிகளின் நியதிகளில் அளவிடப்பட்டவாறு அலுவல்சார் ஒதுக்குகளில் ஏற்பட்ட வீழ்ச்சியானது வெளிநாட்டுத் திடீர் மாற்றங்களினால் நாடு பாதிக்கப்படக்கூடிய தன்மையினை அதிகரித்தது. மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் இறக்குமதி உள்ளடக்கம் 2003 இறுதியின் 4.2 மாதங்களுக்கான இறக்குமதிகளிலிருந்து 2004 இறுதியில் 3.3 மாதங்களுக்கான இறக்குமதிகளுக்கு, வீழ்ச்சியடைந்தது. இதேபோன்று, அலுவல்சார்

அட்டவணை 5.11

**வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடனும் வங்கித் தொழில்துறையின் வெளிநாட்டுப் பொறுப்புக்களும்**

| விடயம் | ஐ.அ.டொலர் மில்லியன் | | | | | ரூபா மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2000 | 2001 | 2002 | 2003 | 2004 (அ) | 2000 | 2001 | 2002 | 2003 | 2004 (அ) |
| **1. நடுத்தர நீண்டகாலப் படுகடன்** | 8,456 | 7,839 | 8,732 | 10,027 | 10,698 | 676,045 | 730,245 | 844,709 | 970,004 | 1,119,090 |
| *1.1 அரசு* | 6,989 | 6,808 | 7,464 | 8,723 | 9,523 | 559,544 | 634,255 | 721,956 | 843,882 | 996,138 |
| *1.2 அரச உத்தரவாதத்துடனான அரச கூட்டுத்தாபனங்களும் தனியார் துறையும்* | 1,028 | 572 | 689 | 602 | 507 | 82,302 | 53,324 | 66,663 | 58,251 | 52,986 |
| *1.3 அரச உத்தரவாதமற்ற அரச கூட்டுத்தாபனங்களும் தனியார் துறையும்* | 278 | 249 | 293 | 334 | 411 | 22,257 | 23,203 | 28,303 | 32,319 | 42,944 |
| *1.4 பன்னாட்டு நாணய நிதிய எடுப்பனவுகள்* | 161 | 209 | 287 | 368 | 258 | 11,943 | 19,463 | 27,787 | 35,552 | 27,023 |
| **2. குறுங்காலப் படுகடன்** 575 | 533 | 601 | 620 | 647 | 46,034 | 49,648 | 58,116 | 59,935 | 67,726 | |
| *2.1 அரசு* | - | - | - | - | - | - | - | - | - | - |
| *2.2 ஏனையவை (ஆ)* | 575 | 533 | 601 | 620 | 647 | 46,034 | 49,648 | 58,116 | 59,935 | 67,726 |
| **3. வங்கித்துறை வெளிநாட்டுப் பொறுப்புக்கள் (இ)** | 1,076 | 1,119 | 1,001 | 1,046 | 1,429 | 86,132 | 104,201 | 96,807 | 101,149 | 149,492 |
| *3.1 மத்திய வங்கி* | ... | 2 | 1 | - | 1 | 33 | 172 | 123 | 32 | 128 |
| *3.2 வர்த்தக வங்கிகள்* | 938 | 1,009 | 865 | 863 | 1,066 | 75,101 | 94,030 | 83,655 | 83,514 | 111,464 |
| *3.3 ஆ.தீ.ஒ. பொறுப்புக்கள்* | 137 | 107 | 135 | 182 | 362 | 10,998 | 9,999 | 13,029 | 17,604 | 37,899 |
| **4. மொத்த வெளிநாட்டுப்படுகடன்(1+2)** | 9,031 | 8,372 | 9,333 | 10,647 | 11,346 | 722,079 | 779,893 | 902,825 | 1,029,939 | 1,186,816 |
| **5. மொத்த வெளிநாட்டுப்படுகடனும் பொறுப்புக்களும் (1+2+3)** | 10,106 | 9,490 | 10,334 | 11,692 | 12,775 | 808,211 | 884,095 | 999,632 | 1,131,088 | 1,336,308 |
| **விளக்கக் குறிப்பு விடயங்கள்** | | | | | | | | | | |
| **நடுத்தர நீண்டகாலப்படுகடன்** | | | | | | | | | | |
| 1. செயற்றிட்டக் கடன்கள் | 5,346 | 5,374 | 4,358 | 6,961 | 7,702 | 427,965 | 480,237 | 421,637 | 673,432 | 805,646 |
| 2. செயற்றிட்டமல்லாக் கடன்கள் | 1,426 | 1,154 | 3,048 | 1,726 | 1,763 | 114,174 | 103,163 | 294,880 | 167,007 | 184,467 |
| 3. நிரம்பலர் கொடுகடன் | 338 | 316 | 100 | 216 | 232 | 27,074 | 29,411 | 9,718 | 20,921 | 24,259 |
| 4. ப.நா.நி. எடுப்பனவுகள் | 161 | 209 | 287 | 368 | 258 | 11,943 | 19,463 | 27,787 | 35,552 | 27,023 |
| 5. ஏனைய கடன்கள் (ஈ) | 1,185 | 786 | 939 | 756 | 743 | 94,890 | 97,971 | 90,686 | 73,092 | 77,696 |
| **குறுகியகாலப் படுகடனும் வங்கித் தொழில் துறைப் பொறுப்புக்களும்** | 1,650 | 1,651 | 1,602 | 1,665 | 2,077 | 132,166 | 153,850 | 154,923 | 161,084 | 217,217 |
| **மொ.உ. உ. வின் சதவீதமாக** | | | | | | | | | | |
| மொத்த வெளிநாட்டுப்படுகடன் | 54.5 | 53.2 | 56.3 | 58.4 | 57.8 | 57.5 | 55.4 | 57.0 | 58.5 | 59.7 |
| மொத்த வங்கித் தொழில் துறை வெளிநாட்டுப் பொறுப்புக்கள் | 6.5 | 7.1 | 6.0 | 5.7 | 7.3 | 6.9 | 7.4 | 6.1 | 5.7 | 7.5 |
| மொத்த வெளிநாட்டுப்படுகடனும் பொறுப்புக்களும் | 61.0 | 60.3 | 62.4 | 64.1 | 65.0 | 64.4 | 62.8 | 63.1 | 64.3 | 67.2 |
| குறுங்காலப் படுகடன் | 3.5 | 3.4 | 3.6 | 3.4 | 3.3 | 3.7 | 3.5 | 3.7 | 3.4 | 3.4 |
| குறுங்காலப்படுகடன் வங்கித தொழில் துறை வெளிநாட்டுப் பொறுப்புக்கள் | 10.0 | 10.5 | 9.7 | 9.1 | 10.6 | 10.5 | 10.9 | 9.8 | 9.2 | 10.9 |
| மொத்தப் படுகடனினதும் பொறுப்புக்களினதும் சதவீதமாக | | | | | | | | | | |
| குறுங்காலப்படுகடன் | 5.7 | 5.6 | 5.8 | 5.3 | 5.1 | 5.7 | 5.6 | 5.8 | 5.3 | 5.1 |
| குறுங்காலப் பொறுப்புக்கள் | 10.6 | 11.8 | 9.7 | 8.9 | 11.2 | 10.7 | 11.8 | 9.7 | 8.9 | 11.2 |
| அலுவல்சார் ஒதுக்கின் சதவீதமாக | | | | | | | | | | |
| குறுங்காலப்படுகடன் | 54.8 | 39.8 | 35.3 | 26.6 | 29.5 | 55.1 | 39.8 | 35.3 | 26.6 | 29.5 |

*மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி*
*வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களம்.*

(அ) தற்காலிகமானவை.
(ஆ) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஏற்றுக்கொள்ளப்பட்டகொடுகடன்களையும் ஏனைய வர்த்தகக் கொடுகடன்களையும் உள்ளடக்குகின்றது.
(இ) ஆதீஒ இன் பற்றுக்களும் வெளிநாட்டுச் செலாவணி வங்கிக் கூறுகள் உள்ளிட்ட வர்த்தக வங்கிகளின் பொறுப்புக்களும்.
(ஈ) அரச கூட்டுத்தாபனங்களினதும் தனியார் துறை நிறுவனங்களினதும் நீண்ட காலக் கடன்களையும் உள்ளடக்குகின்றது.

ஒதுக்குகளின் மட்டம் 2003 இல் இறுதியின் இருந்த 102 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2004 இறுதியில், நாட்டின் சகல குறுங்கால வெளிநாட்டு பொறுப்புக்களில் 79 சதவீதமானவற்றை மட்டும் ஈடுசெய்யப் போதுமானதாகவிருந்தது. ஓராண்டு காலத்திற்குள் முதிர்ச்சியடையும் வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட உள்நாட்டுப் பொறுப்புக்களும் குறுங்கால வெளிநாட்டுப் பொறுப்புக்களில் உள்ளடக்கப்படுமாயின் 2004 இறுதியில் இவ்விகிதம் 74 சதவீதத்திற்கு மேலும் வீழ்ச்சியடைந்திருக்கும். அரசாங்கத்தின் உள்நாட்டின் வெளிநாட்டு நாணயப் படுகடன் அலுவல்சார் ஒதுக்குகளிலிருந்து கொடுத்துத் தீர்க்கப்படுவதனால் பாதிக்கப்படக் கூடிய தன்மையினைக் கருத்திற் கொண்டு நோக்குகையில் பின்னையது மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் போதுமைக்கான மிகப் பொருத்தமானதொரு அளவீடாக விளங்குகின்றது.


அலுவல்சார் ஒதுக்குகளிலான வீழ்ச்சிக்கு மத்தியிலும், முக்கியமாக வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுச் சொத்துக்கள் கட்டியெழுப்பப்பட்டதன் காரணமாக, நாட்டின் மொத்த வெளிநாட்டு ஒதுக்குகள் 2003 இன் ஐ.அ.டொலர்கள் 3,218 மில்லியன்களிலிருந்து 2004 இன் இறுதியில் ஐ.அ.டொலர்கள் 220 மில்லியனால் ஐ.அ.டொலர்கள் 3,438 மில்லியன்களுக்கு அதிகரித்தன.

## 5.6 வெளிநாட்டுப் படுகடன் மற்றும் படுகடன் பணிகள்

### வெளிநாட்டுப் படுகடன்

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக இலங்கையின் மொத்த வெளிநாட்டுப் படுகடன் 2003 இன் 58.4 சதவீதத்திலிருந்து 2004 இல் 57.8 சதவீதத்திற்குக் குறைவடைந்தது. எனினும், உண்மை நியதிகளில், மொத்த வெளிநாட்டுப் படுகடன்கள் ஐ.அ.டொலர்கள் 11,346 மில்லியன்களுக்கு 7 சதவீதத்தினால் அதிகரித்தன. பரந்தளவானதொரு கூட்டாக, மொத்த வெளிநாட்டுப் படுகடனும் வங்கித்தொழில் துறை வெளிநாட்டுப் பொறுப்புக்களும் ஏறத்தாழ ஐ.அ.டொலர்கள் 12,775 மில்லியன்களுக்கு 9 சதவீதத்தினால் அதிகரித்தன. இவ்வதிகரிப்பானது, சலுகை அடிப்படையிலான அரச படுகடன் மற்றும் வங்கித் தொழில் துறையின் வெளிநாட்டுப் பொறுப்புக்கள் ஆகிய இரண்டிலும் பிரதிபலிக்கப்பட்டது. படுகடனில் ஏறத்தாழ 42 சதவீதமும், 31 சதவீதமும் முறையே சிஎஉ இலும் யென்னிலும் குறித்துரைக்கப் பட்டுள்ளமையால் முக்கிய நாணயங்களுக்கெதிராக ஐ.அ.டொலர் தேய்வடைந்தமையே ஐ.அ.டொலரிலான

வரைபடம் 5.9
**வெளிநாட்டுப் படுகடன்**




வெளிநாட்டுப் படுகடன் 40 சதவீதத்திற்கும் மேலாக அதிகரிப்பதற்கான காரணமாகும்.

2004 இல் மொத்தப் படுகடன் இருப்பில், நடுத்தர மற்றும் நீண்டகாலப் படுகடன்கள் ஏறத்தாழ 94 சதவீதத்திற்கு வகைகூறியதுடன், இவற்றை 84 சதவீதம் முக்கியமாக அரசாங்கத்தின் சலுகை அடிப்படையிலான படுகடன்களை உள்ளடக்கியிருந்ததுடன், எஞ்சிய 16 சதவீதத்தினை சலுகையற்ற படுகடன்கள் பிரதி நிதிப்படுத்தின. அரசாங்கத்தின் சலுகையல்லா படுகடன் இருப்பு ஒப்பீட்டு ரீதியில் சிறியதாக இருந்தமையினால், சலுகையல்லா படுகடன் தனியார் துறையின் நடுத்தர மற்றும் நீண்டகால படுகடன்களையே பெருமளவிற்கு பிரதிபலித்தது. ஐ.அ.டொலர் நியதிகளில், அரசாங்கத்தின் சலுகை அல்லாத படுகடன் இருப்பு 2004 இன் இறுதியில் ஐ.அ.டொலர்கள் 232 மில்லியன்களுக்கு 7 சதவீதத்தால் அதிகரித்தது. சலுகை நியதிகளிலான கடன்களின் உயர்ந்த மற்றும் திறன் வாய்ந்த பயன்பாடு மற்றும் சலுகையற்ற படுகடன்களை மட்டுப்படுத்தல் என்பன வெளிநாட்டுப் படுகடனை இலங்கை தாக்குப்பிடிக்கக்கூடிய ஒருமட்டத்தில் பேணுவதற்கு மிக முக்கியமான காரணிகளாகவுள்ளன.

2004 இல் தனியார்துறைச் மொத்த குறுங்காலப் படுகடன்கள் ஐ.அ.டொலர்கள் 620 மில்லியன்களிலிருந்து ஐ.அ.டொலர்கள் 647 மில்லியன்களுக்கு ஏறத்தாழ 4 சதவீதத்தினால் அதிகரித்தன. எதிர்பாராத பொறுப்புக்களைக் குறைப்பது என்ற அரசாங்க கொள்கைக்கு அமைவாக உத்தரவாதங்களை வழங்குவதில் அரசாங்கம் முன்னெச்சரிக்கையாக இருந்தமையின் காரணமாக அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் தனியார்துறை என்பவற்றின் அரச உத்தர வாதமளிக்கப்பட்ட வெளிநாட்டுப் படுகடன்களின் இருப்பு ஐ.அ.டொலர்கள் 507 மில்லியன்களுக்கு 16 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. சிறீலங்கன் எயார் லைன்ஸ் மற்றும் இலங்கை ரெலிகொம் என்பன

இவ்வாண்டுக் காலத்தில் ஐ.அ.டொலர்கள் 73 மில்லியன் தொகை கொண்ட படுகடன்களை தீர்ப்பனவு செய்தமையே இவ்வீழ்ச்சிக்கான காரணமாகவிருந்தது. இலங்கை ரெலிகொம் நிறுவனத்தினால் ஐ.அ.டொலர்கள் 100 மில்லியன் தொகை கொண்ட பன்னாட்டு முறிகள் வெற்றிகரமாக வழங்கப்பட்டதன் காரணமாக, அரசாங்க உத்தரவாதங்களற்ற தனியார்துறை வெளிநாட்டுப் படுகடன்கள் 2004 இல் ஐ.அ.டொலர்கள் 411 மில்லியன்களுக்கு ஏறத்தாழ 23 சதவீதத்தினால் அதிகரித்தன.

வர்த்தகக் கொடுகடனை உள்ளடக்கிய, நாட்டின் குறுங்கால வெளிநாட்டுப் படுகடன் இருப்பு ஐ.அ.டொலர்கள் 647 மில்லியன்களுக்கு ஏறத்தாழ 4 சதவீதத்தினால் அதிகரித்தது. மொத்தப் படுகடன் இருப்பில் குறுங்காலப் படுகடன்களின் பங்கு, 5.7 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. துணைநில் ஒழுங்குகள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான வெளிநின்ற கடன்களின் மீள்கொடுப்பனவு காரணமாக பன்னாட்டு நாணய நிதியத்திற்கான பொறுப்புக்கள் இவ்வாண்டில் ஐ.அ.டொலர்கள் 110 மில்லியன்களால் குறைவடைந்தன. அதேவேளை, ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் பொறுப்புக்களில் ஏற்பட்ட தற்காலிகமானதொரு அதிகரிப்பு மற்றும் வர்த்தக வங்கிகளின் பொறுப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பன காரணமாக 2004 இன் இறுதியில் வங்கித் தொழில் துறையின் வெளிநாட்டுப் பொறுப்புக்கள் ஐ.அ.டொலர்கள் 383 மில்லியன்களால் ஐ.அ.டொலர்கள் 1,429 மில்லியன்களுக்கு அதிகரித்தன.

மேற்குறிப்பிடப்பட்ட அபிவிருத்திகளை பிரதிபலிக்கும் விதத்தில் வங்கித் தொழில் துறையின் பொறுப்புக்களை உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டுப் படுகடன் மற்றும் ஏனைய பொறுப்புக்கள் 2003 இன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 64.1 சதவீதத்திலிருந்து 2004 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 65 சதவீதத்திற்கு சிறிதளவால் அதிகரித்தன. ஆயினும், ஏற்கனவே விபரித்ததுபோல், ஐ.அ.டொலர் நியதிகளில் படுகடன் இருப்பு ஐ.அ.டொலர்கள் 12,775 மில்லியன்களுக்கு 9 சதவீதத்தினால் அதிகரித்தன.

## வெளிநாட்டுப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள்

2004 ஆம் ஆண்டில், நடுத்தர மற்றும் நீண்டகால வெளிநாட்டுப் படுகடன்களின் தீர்ப்பனவுகள் மற்றும் அனைத்து வெளிநாட்டுப் படுகடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் ஆகிய இரண்டையும் உள்ளடக்கிய மொத்தப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள், ஐ.அ.டொலர்கள் 839 மில்லியன்களுக்கு 10 சதவீதத்தினால் அதிகரித்தன. படுகடன் பணிக் கொடுப்பனவுகளில் ஏறத்தாழ 70 சதவீதத்திற்கு வகைகூறும் மொத்தக் கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் 2004 இல் ஐ.அ.டொலர்கள் 590 மில்லியன்களுக்கு 12 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு, துணைநில் ஒழுங்குகளின் கீழான வெளிநின்ற வசதிகளின் பேரிலான ப.நா.நிதியத்திற்கான மீள்கொடுப்பனவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும். இவ்வாண்டில், பன்னாட்டு நாணய நிதியத்திற்கான மூலதன கொடுப்பனவுகள் 2003 இன் ஐ.அ.டொலர்கள் 32 மில்லியன்களிலிருந்து ஐ.அ.டொலர்கள் 107 மில்லியன்களுக்கு அதிகரித்தன. எனினும், பாதுகாப்புக் கடன்களின் மீள்கொடுப்பனவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் முக்கிய காரணமாக அரச படுகடன்களின் கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் ஐ.அ.டொலர்கள் 331 மில்லியன்களுக்கு 8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. அரசாங்கத்தின் வெளிநாட்டுப் படுகடன் இருப்பு மற்றும் உலக வட்டி வீதங்கள் ஆகிய இரண்டிலு மேற்பட்ட அதிகரிப்புக்களை பிரதிபலிக்கும் விதத்தில் 2004 இல் வட்டிக் கொடுப்பனவுகள் ஐ.அ.டொலர்கள் 249 மில்லியன்களுக்கு ஏறத்தாழ 6 சதவீதத்தினால் அதிகரித்தன. மேலும் பன்னாட்டுச் சந்தையில் ஐ.அ.டொலர் நலிவுற்றமையினால் யப்பானிய யென் மற்றும் சிஎஉ இல் குறித்துரைக்கப்பட்ட படுகடன் மீதான கொடுப்பனவுகள் முறையே 19 சதவீதத்தினாலும் 16 சதவீதத்தினாலும் அதிகரித்தன.

இவ்வாண்டில், முக்கியமாக பன்னாட்டு நாணய நிதியத்திற்கான மீள்கொடுப்பனவுகளில் ஏற்பட்ட கணிசமானதொரு அதிகரிப்பின் காரணமாக வெளிநாட்டுச் செலாவணி உழைப்பில் ஏற்பட்ட மேம்பாட்டுக்கு மத்தியிலும் படுகடன் பணி விகிதத்தினால் அளவிடப்பட்டவாறு வெளிநாட்டுப் படுகடனை கொடுத்துத் தீர்ப்பதற்கான நாட்டின் ஆற்றல் 2003 ஆம் ஆண்டின் மேம்பாடுடன் ஒப்பிடுகையில் 2004 ஆம் ஆண்டில் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. பன்னாட்டு நாணய நிதியத்திற்கான மீளக்கொடுப்பனவுகளை நீக்கும்போது, இவ்விகிதம் பெரும்பாலும் 2003 இல் இருந்ததைப் போன்று தொடர்ந்தும் அதேமட்டத்தில் காணப்பட்டது. எனினும், சலுகை அடிப்படையிலான படுகடன்கள் அரசாங்கத்தின் மொத்தப் படுகடனில் பாரிய பங்கினைக் கொண்டிருப்பதால், பன்னாட்டு நியமங்களின்படி இவ்விகிதங்கள் மிதமிஞ்சிய சுமையானதாக கருதப்படவில்லை.

## 5.7 செலாவணி வீத அமைப்பும் செலாவணிவீத அசைவுகளும்

2003 நவெம்பரில், ஐ.அ.டொலர்கள் தொடர்பான செலாவணி வீதமானது ஆண்டின் முற்பாகத்தில் நிலவிய அதன் பெறுமான வளர்ச்சியடையும் போக்கை மாற்றத் தொடங்கியது. உலகளாவிய மற்றும் உள்நாட்டு திடீர் மாற்றங்களின் காரணமாக 2003 ஆம் ஆண்டின்

அட்டவணை 5.12
**வெளிநாட்டுப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள்**

| விடயம் | ஐ.அ.டொலர் மில்லியன் | | | | | ரூபா மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2000 | 2001 | 2002 | 2003 | 2004(அ) | 2000 | 2001 | 2002 | 2003 | 2004(அ) |
| 1. படுகடன் பணிக் கொடுப்பனவுகள் | 953 | 813 | 788 | 761 | 839 | 74,554 | 72,584 | 74,704 | 73,125 | 84,845 |
| 1.1 கடன் தீர்ப்பனவுகள் | 621 | 558 | 572 | 526 | 590 | 49,410 | 49,883 | 54,006 | 50,502 | 59,561 |
| (i) ப.நா. நிதியத்திற்கு | 97 | 78 | 56 | 32 | 107 | 9,700 | 6,966 | 4,647 | 2,869 | 10,718 |
| (ii) ஏனையவற்றிற்கு | 524 | 480 | 516 | 493 | 483 | 39,711 | 42,918 | 49,359 | 47,632 | 48,843 |
| 1.2 வட்டிக் கொடுப்பனவுகள் | 332 | 254 | 216 | 235 | 249 | 25,144 | 22,701 | 20,698 | 22,623 | 25,284 |
| (i) ப.நா. நிதியத்திற்கு | 5 | 4 | 4 | 4 | 10 | 410 | 348 | 398 | 414 | 988 |
| (ii) ஏனையவற்றிற்கு | 326 | 251 | 212 | 230 | 240 | 24,734 | 22,353 | 20,300 | 22,209 | 24,297 |
| 2. வணிகப் பொருட்களின் ஏற்றுமதிகளிலும் பணிகளிலுமிருந்தான வருவாய்கள் | 6,476 | 6,172 | 5,967 | 6,544 | 7,284 | 492,301 | 551,309 | 571,195 | 631,549 | 738,714 |
| 3. வணிகப் பொருட்கள் ஏற்றுமதிகள், பணிகள், தனியார் மாற்றல்களிலிருந்தான பெறுகைகள் | 7,787 | 7,436 | 7,330 | 8,127 | 9,004 | 591,567 | 664,073 | 701,579 | 784,408 | 912,818 |
| 4. படுகடன் பணி விகிதங்கள் (ஆ) | | | | | | | | | | |
| 4.1 மேலுள்ள 2இன் சதவீதமாக | | | | | | | | | | |
| (i) முழு மொத்த விகிதம் | 14.7 | 13.2 | 13.2 | 11.6 | 11.5 | 15.1 | 13.2 | 13.1 | 11.6 | 11.5 |
| (ii) ப.நா.நி. கொடுக்கல் வாங்கல் நீங்கலாக | 13.1 | 11.8 | 12.2 | 11.0 | 9.9 | 13.1 | 11.8 | 12.2 | 11.0 | 9.9 |
| 4.2 மேலுள்ள 3இன் சதவீதமாக | | | | | | | | | | |
| (i) முழு மொத்த விகிதம் | 12.2 | 10.9 | 10.8 | 9.4 | 9.4 | 12.6 | 10.9 | 10.6 | 9.3 | 9.3 |
| (ii) ப.நா.நி. கொடுக்கல் வாங்கல் நீங்கலாக | 10.9 | 9.8 | 9.9 | 8.9 | 8.0 | 10.9 | 9.8 | 9.9 | 8.9 | 8.0 |
| 5. அரச படுகடன் பணிக் கொடுப்பனவு | | | | | | | | | | |
| 5.1 அரச படுகடன் பணிக் கொடுப்பனவுகள் (இ) | 437 | 450 | 522 | 502 | 484 | 33,100 | 40,190 | 49,928 | 48,452 | 48,952 |
| 5.2 மேலுள்ள 1இன் சதவீதமாக | 45.9 | 55.3 | 66.2 | 66.0 | 57.7 | 44.4 | 55.4 | 66.8 | 66.3 | 57.7 |

(அ) தற்காலிகமானவை.
(ஆ) ரூபாய் பெறுமதியிலும் ஐ.அ.டொலர் பெறுமதியிலும் கணிக்கப்பட்ட படுகடன் பணி விகிதம் வேறுபடுவதற்கு ஆண்டுப் பகுதியில் செலாவணி வீதங்களில் ஏற்பட்ட மாறுபாடுகளே காரணமாகும்.
(இ) ப.நா.நி. கொடுக்கல் வாங்கல்கள் தவிர்த்து.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

இறுதி இரு மாத காலப்பகுதியிலும் மாறுபாடடையும் தன்மையை கொண்டிருந்தது. 2004 இன் முக்கியப் பண்பு யாதெனில் இத் தேய்வடைந்து செல்லும் போக்கு ஆண்டு முழுவதும் தொடர்ந்து காணப்பட்டமையே யாகும். சென்மதி நிலுவையின் பற்றாக்குறை செலாவணி வீதத்தின் மீது ஏற்படுத்திய அழுத்தத்தைத் தொடர்ந்து அது 2004 திசெம்பர் 17 இல் ஐ.அ.டொலர் ஒன்று ரூ.105.47 இனை அடைந்ததுடன் இது வங்கிகளுக் கிடையிலான சந்தையிலான அதிகூடிய வீதமாகவும் விளங்கியது. ஆயினும் சுனாமி அனர்த்தத்தின் பின்னர் நாட்டிற்குள் பாரியளவிலான வெளிநாட்டு உதவி பாய்ச்சல்கள் ஏற்படும் என்ற எதிர்பார்க்கையுடன் சந்தை செயற்பட்டதுடன் இது 2004 திசெம்பர் 31 இல் செலாவணி வீதம் ஐ.அ.டொலர் ஒன்றிற்கு ரூ.104.61 ஆக பெறுமான உயர்வடைந்ததன் மூலம் பிர திபலிக்கப்பட்டது. இவ்வாண்டினை முழுமையாக நோக்குகையில், ஐ.அ.டொலருக்கெதிராக ரூபா 2003 ஆம் ஆண்டின் 0.01 சதவீதம் கொண்ட சிறியளவு பெறுமானத் தேய்வுடன் ஒப்பிடுகையில், 7.5 சதவீதத்தினால் பெறுமானத் தேய்வடைந்தது.


ஏனைய முக்கிய நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபா ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த வீதத்தில் தேய்வடைந்தது. இது யூரோ (14.6 சதவீதம்), ஸ்ரேலிங் பவுண் (14.5 சதவீதம்), இந்திய ரூபாய் (11.5 சதவீதம்), யப்பானிய யென் (11.2 சதவீதம்) மற்றும் சிஎஉ (11 சதவீதம்) என்பனவற்றிற்கெதிராக கணிசமானளவிற்கு தேய்வடைந்து, பன்னாட்டுச் சந்தைகளில் ஐ.அ.டொலருக்கெதிராக குறுக்கு வீதங்களில் ஏற்பட்ட மாற்றங்களைப் பிரதிபலித்தது.

## பெயரளவு மற்றும் உண்மைப் பயன்தரு செலாவணி வீதங்கள்


முக்கிய நாணயங்களுக்கெதிராக ரூபா ஒப்பீட்டு ரீதியில் உயர் பெறுமானத் தேய்வினைக் கொண்டிருந் ததன் விளைவாக, 5 நாணயக் கூடைகளை அடிப்படை யாக (ஐ.அ.டொலர், யப்பானிய யென், ஸ்டேர்லிங் பவுண், இந்திய ரூபா மற்றும் யூரோ) கொண்ட பெயரளவு பயன்தரு செலாவணி வீதம் 10.3 சதவீதத்தினால் தேய்வடைந்த வேளையில் 24 வர்த்தக பங்காளர்கள் மற்றும் போட்டியாளர்களை அடிப்படையாகக் கொண்ட

வரைபடம் 5.10
**செலாவணிவீத அசைவுகள்**

**2003, 2004 இலான செலாவணிவீத அசைவுகள்**
**ஐ.அ.டொலரொன்றுக்கு, ரூபா**




**பயன்தரு செலாவணி வீதச் சுட்டெண்கள்**
**24 - நாணயம் (1999 = 100)**




அட்டவணை 5.13
**செலாவணி வீத அசைவுகள்**

| நாணயம் | வெளிநாட்டு நாணய அலகு ஒன்றிற்கு ரூபா | | | | | | முன்னைய ஆண்டினைவிட சதவீத மாற்றம் (அ) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண்டு இறுதி வீதங்கள் | | | ஆண்டுச் சராசரி | | | புள்ளிக்குப் புள்ளி | | ஆண்டுச் சராசரி | |
| | 2002 | 2003 | 2004 | 2002(அ) | 2003 | 2004 | 2003 | 2004 | 2003 | 2004 |
| யூரோ | 101.38 | 121.60 | 142.32 | 90.43 | 109.16 | 125.79 | -16.6 | -14.6 | -17.2 | -13.2 |
| இந்திய ரூபாய் | 2.01 | 2.12 | 2.40 | 1.97 | 2.07 | 2.23 | -5.1 | -11.5 | -4.9 | -7.2 |
| யப்பானிய யென் | 0.82 | 0.90 | 1.02 | 0.77 | 0.83 | 0.94 | -9.7 | -11.2 | -7.6 | -10.9 |
| பவுண் இசுடேர்லிங் | 155.13 | 172.20 | 201.37 | 143.74 | 157.71 | 185.35 | -9.9 | -14.5 | -8.9 | -14.9 |
| ஐ.அ.டொலர் | 96.73 | 96.74 | 104.61 | 95.66 | 96.52 | 101.19 | 0.0 | -7.5 | -0.9 | -4.6 |
| சிஎஉ | 130.99 | 143.75 | 161.60 | 123.93 | 135.23 | 149.88 | -8.9 | -11.0 | -8.4 | -9.8 |

| தாக்கமுள்ள செலாவணிவீதச் சுட்டெண் (ஆ) | மாதாந்தச் சுட்டெண் | | | ஆண்டுச் சராசரி | | | முன்னைய ஆண்டினைவிட சதவீத மாற்றம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | புள்ளிக்குப் புள்ளி | | ஆண்டுச் சராசரி | |
| | 2002திசெ. | 2003திசெ | 2004திசெ | 2002 | 2003 | 2004 | 2003 | 2004 | 2003 | 2004 |
| பெ.தா.செ.வீ (1999=100) | 76.07 | 71.58 | 63.18 | 78.87 | 73.84 | 67.63 | -5.90 | -11.74 | -6.38 | -8.41 |
| உ.தா.செ.வீ (1999=100) | 100.08 | 96.75 | 94.84 | 99.33 | 97.25 | 93.61 | -3.33 | -1.97 | -2.09 | -3.74 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) இலங்கை ரூபாவுக்குச் சமமான வெளிநாட்டு நாணயங்களின் அடிப்படையில் மாற்றங்கள் கணிக்கப்பட்டுள்ளன. சய அடையாளம் பெறுமானத் தேய்வினைக் குறிப்பிடுகின்றது.

(ஆ) பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதமென்பது 24 வர்த்தகப் பங்காளர்களின் மற்றும் போட்டி நாடுகளின் பெயரளவுச் செலாவணி வீதத்தின் நிறையேற்றப்பட்ட சராசரியாகும். நாணயக் கூடையிலுள்ள ஒவ்வொரு நாணயத்தினதும் தொடர்பின் முக்கியத்துவத்தினை பிரதிபலிக்கின்ற விதத்தில் நிறைகள் இருபுடை வர்த்தகப் பங்கினை அடிப்படையாகக் கொண்டுள்ளன. கூடையில் உள்ளடக்கப்பட்டுள்ள நாணயங்களைக் கொண்ட நாடுகளின் பணவீக்க வேறுபாடுகளுக்காக பெயரளவு தாக்கமுள்ள செலாவணி வீதங்களை சீராக்குவதன் மூலமாக உண்மைத்தாக்கமுள்ள செலாவணி வீதம் கணிக்கப்படுகிறது. சய அடையாளம் பெறுமானத் தேய்வினைக் குறிப்பிடுகின்றது.

பெயரளவு பயன்தரு செலாவணி வீதம் இவ்வாண்டில் 11.0 சதவீதம் கொண்ட உயர் வீதத்தில் பெறுமானத் தேய்வை அடைந்தது. எனினும், நாடுகளுக்கிடையிலான பணவீக்க வேறுபாட்டிற்காக சீராக்கம் செய்யும்போது உண்மைப் பயன்தரு செலாவணி வீதம் 5 மற்றும் 24 நாணயக்கூடை தொடர்பாக முறையே 1.0 சதவீதத்தினாலும் 1.1 சதவீதத்தினாலும் சிறிதளவால் தேய்வடைந்து, இலங்கையினது ஏற்றுமதிகளின் போட்டித்

தன்மை சிறிதளவால் மட்டுமே மேம்பட்டதைச் சுட்டிக் காட்டுகிறது. ஆகையால், 2004 இல் பொதுவாக இலங்கையின் செலாவணி வீதம் உண்மை நியதிகளில் தொடர்ந்தும் உறுதியாகவிருந்தது.


## உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை அபிவிருத்திகள்

2004 ஆம் ஆண்டு காலத்தில் வெளிநாட்டுத் துறையின் அபிவிருத்திகள் உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தை செயற்பாடுகள் மீது கலப்பானதொரு தாக்கத்தை கொண்டிருந்தன. நிச்சயமற்ற தன்மையானது வங்கிகளுக்கிடையிலான உடன் சந்தை கொடுக்கல் வாங்கல்களை அதிகரித்த வேளையில், முன்னோக்கிய சந்தைச் செயற்பாடுகளில் தளர்ச்சியுறச் செய்யுமொரு தாக்கத்தைக் கொண்டிருந்தது. உடன் சந்தையில் வர்த்தகத்தின் அளவு பெருமளவில் அதிகரித்ததன் காரணமாக முன்னோக்கிய சந்தைக் கொடுக்கல் வாங்கல்களின் அளவை உள்ளடக்கிய வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களின் அளவு 2003 ஆம் ஆண்டின் ஐ.அ.டொலர்கள் 3,649 மில்லியன்களிலிருந்து 2004 இல் ஐ.அ.டொலர்கள் 4,330 மில்லியன்களுக்கு கணிசமானளவில் அதிகரித்தன. எனினும், வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல்களின் அளவு 2003 இல் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொலர்கள் 1,442 மில்லியன்களிலிருந்து (மொத்தக் கொடுக்கல் வாங்கல்களில் 38 சதவீதம்) 2004 இல் ஐ.அ.டொலர்கள் 1,026 மில்லியன்களுக்கு (மொத்தக் கொடுக்கல் வாங்கல்களில் 23 சதவீதம்) குறைவடைந்தது.

ஆண்டின் முதல் காலாண்டுப் பகுதியிலான ஐ.அ.டொலர்கள் 355 மில்லியன் மொத்தக் கொடுக்கல் வாங்கல்களுடன் 2004 இன் தொடக்கத்தில் செயற்றிறனுடையதாகவிருந்த முன்னோக்கிய சந்தையானது இறுதிக் காலாண்டில் ஐ.அ.டொலர்கள் 232 மில்லியன்களுக்கு மீண்டும் உயர்வடைதற்கு முன்னர் இவ்வாண்டில் படிப்படியாக வீழ்ச்சியடைந்து இரண்டாம் மற்றும் மூன்றாம் காலாண்டுகளில் முறையே ஐ.அ.டொலர்கள் 233 மில்லியன் மற்றும் ஐ.அ.டொலர்கள் 201 மில்லியன்களைப் பதிவு செய்தது. முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல்களின் அளவு மற்றும் முன்னோக்கிய இலாபம் ஆகிய இரண்டினதும் அசைவுகள் இவ்வாண்டுக் காலத்தில் நிலவிய

வரைபடம் 5.11

**வங்கிகளுக்கிடையேயான முன்நோக்கிய கொடுக்கல் வாங்கல்கள் 2003 - 2004**




நிச்சயமற்ற தன்மையைப் பிரதிபலித்தன. முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல்களில் 1 மாத மற்றும் 3 மாத வகைகளுக்கான சராசரி வருடாந்த முன்னோக்கிய கட்டணம் இவ்விரு வகைகளுக்குமான 4.8 சதவீதத்திலமைந்த வட்டி வீத வேறுபாடுகளுக்கு கூடுதலாக 7.86 சதவீதத்திற்கும் 8.33 சதவீதத்திற்கும் அதிகரித்தது. பெரும்பாலும் ஆண்டு முழுவதும் முன்னோக்கிய வட்டி வீத வேறுபாடுகளை விடவும் உயர்வாக இருந்து, நாணயத்தின் விரைவான பெறுமானத்தேய்வினை அல்லது உயர்ந்த வட்டி வீதங்கள் என்பன தொடர்பான சந்தை எதிர்பார்க்கைகளைச் சுட்டிக் காட்டியது.

2003 இனைப் போன்றே வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் காணப்பட்ட மிதமிஞ்சிய அடிக்கடி மாறுபாடடையும் தன்மையை தணிப்பதற்காக மத்திய வங்கி வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் தொடர்ந்தும் தலையீடு செய்தது. 2003 இல் அலுவல்சார் ஒதுக்குகளை கட்டியெழுப்புவதற்காக பாரியளவில் கொள்வனவு செய்தமைக்கு மாறாக, சந்தையில் அதிகரித்த கேள்வியை ஈடுசெய்வதற்கு மத்திய வங்கி தலையீடு செய்ததனால் 2004 இல் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி விற்பனை முன்னணி வகிக்கின்றது. இதன்படி 2004 இல் மத்திய வங்கி ஐ.அ.டொலர்கள் 541.7 மில்லியன்களை விற்று, ஐ.அ.டொலர்கள் 27 மில்லியன்களை கொள்வனவு செய்ததன் விளைவாக தேறிய விற்பனை ஐ.அ.டொலர்கள் 514.7 மில்லியன்களாகவிருந்தது.